உ

நாரதர்மலை மாரியம்மன்

பிள்ளைத்தமிழ்

ஆசிரியர் :

புலவர். கி. மு. சுந்தரகணேசன்
M. A., B T.,

எழில்மலர்ப் பதிப்பகம்

ஆத்தூர் அஞ்சல், சேலம் மாவட்டம்.

வெளியீடு — 2
முதற்பதிப்பு — ஏப்ரல் 1972

தமிழக அரசு, கல்லூரிக் கல்வி நெறியாளர்
அனுமதி பெற்றது.
எல். டிஸ். எண். 13312/V/71 நாள் : 25—3—72

விலை ரூ. 12-40

கிடைக்குமிடம் :
ஏழில்மலர்ப் பதிப்பகம்,
உரிமையாளர் : கு. பெ. மகாலிங்கம்
ராஜன் நிலையம்
ஆத்தூர் அஞ்சல்
சேலம் மாவட்டம்.

அச்சிட்டோர் : செந்தமிழ்ப் பதிப்பகம்,
கீழராசவீதி, புதுக்கோட்டை.

புதுக்கோட்டை

நாரதர்மலை மாரியம்மன்

பிள்ளைத்தமிழ்

ஆசிரியர்:

புலவர். சு. மு. சுந்தரகணேசன் M.A., B.T.,

துணைப்பேராசிரியர்

மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை.

எழில்மலர்ப் பதிப்பகம்

ஆத்தூர் அஞ்சல், சேலம் மாவட்டம்.

பதிப்புரை

"பழநி அந்தாதி" என்ற நூலைப்பாடி என்னையும் எங்கள் குடும்பத்தையும் பக்திக்கடலில் ஆழ்த்திய பேராசிரியர் புலவர் கு. மு. சுந்தரகணேசன் M.A. B.T, அவர்கள் புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள நாரதர்மலையில் அமர்ந்திருக்கும் மாரியம்மனுக்கு "பிள்ளைத்தமிழ்" என்ற பாமாலையைப்பாடிச் சூட்டி, மீண்டும எங்களைப்பக்திக்கடலில் திளைக்க வைத்துள்ளார்கள். அவர்களுக்கு யானும் எங்கள் குடும்பமும் கடமைப்பட்டுள்ளோம் இந்நூலுக்கு அணிந்துரை நல்கிய உயர்திரு பாவலர் ச. பாலசுந்தரம் பேராசிரியர் (கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்) அவர்களுக்கும், சிறந்த முறையில் அச்சிட்டுத்தந்த புதுக்கோட்டை செந்தமிழ்ப் பதிப்பகத்தாருக்கும் எனது நன்றி உரித்தாகுக. பழநி அந்தாதியை ஏற்று சிறப்பித்த தமிழுலகம் இப்பிள்ளைத்தமிழையும் ஏற்று தமிழும் சமயமும் வாழ உறுதுணையாக நின்று எம்முயற்சியைப் பாராட்டி ஊக்குவிக்கும் என நம்புகின்றேன்

அன்பன்,

ராஜன் நிலையம்
ஆத்தூர்
5—4—72

கு. பெ. மகாலிங்கம்

அணிந்துரை

தமிழ் என்ருல் இனிமை, அழகு தூய்மை முதலான பல்வேறு உயர்ந்த குணங்களின் கருவூலம் என்பார். அன்றியும தமிழ் என்ருல் அன்பு, அருள், ஆன்மஒளி இவற்றைப் பெருக்கி உவமையிலாப் பரம்பொருளோடு ஒன்றுவிக்கும் உயிர்க்கருவி என்பர் வாலறிவுடைய சான்ருேர். அவ்வழி உணர்ந்த அப்பெருமக்கள் அறமுதலாய மும்முதற்பொருளை அருந்தமிழால் வெளிப்படுத்தியதைக் காட்டிலும அகவொளி பெருக்கி வீடு பேறளிக்கும் ஞான உணர்வுகளை வெளிப் படுத்திய தமிழே மிகுதியாகும்.

தேவார திருவாசக திருவாய்மொழி முதலான அருள் நிலைத் தமிழ்ச் செல்வங்களை ஒப்ப இறையருள் பயக்கும் அந்தாதி, உலா, கோவை கலம்பகம், மாலை, பிள்ளைத்தமிழ் என்றத்தொடக்கத்து சிறு பிரபந்தங்களை மன்பதை உய்ய அருளாளர் பலர் அருளிச் செய்துள்ளனர். தமிழின் பயனே தன்னிகரில்லாத் தெய்வத்தைச்சார்ந்து தெய்வமாதலேயாம். அவற்றுள்ளும் தமிழ் என்ற சொல்லைத தன்பால் பெற்று மனத்திற்கும் அறிவிற்கும அப்பாற்பட்ட செம்பொருளைப் பிள்ளையாக ஆக்கி உலகியற்பிள்ளைப் பேற்றின்பத்தினும் ஓராயிரங்கோடியினுமிகுதியாக இம்மையின்பமும் மறுமைப் பயனும் அளிக்கும் பிள்ளைப் பிரபந்தம் மிகச் சிறப்புடைய தாகும. அதனுற்ருன் தெய்வங்களையும் தெய்வத்தோ டொத்த சான்ருேர்களையும் பிள்ளையாக வைத்துப்பாடி யுள்ளனர், அருட்கவிகள். முருகனைப்பற்றி ஆயிரம பிள்ளைத் தமிழ் உண்டு உமையவளைப பற்றியும பனனூறுபனுவல்கள் உள. மகாவித்துவான மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சேக்கிழாரைப் பிள்ளையாக்கி மகிழ்ந்தார். இத்தொடர்ச்சியில் குமரகுருபரர், மீனுட்சிசுந்தரம் பிள்ளை போன்ருேரின் மரபு வழிவந்த புலவரும், புதுக்கோட்டை அரசினர் கலைக்கல்லூரி யில் தமிழ்ப்பணியாற்றிவருபவரும் அன்பும், பண்பும் ஆழ்ந்த இறையுணர்வும் சான்ற வருமான திருவாளர் கூ. மு சுந்தரகணேசன் எம். ஏ. பி டி., அவர்கள் புதுக் கோட்டைக்கண்மையிலுள்ள நாரத்தாமலை என்னும் நாரதர்

மலையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் மாரியம்மன் பேரில் இந்த அருமையான பிள்ளைத்தமிழை இயற்றியுள்ளார்கள். இக்கலியூழியுள் கண்கண்ட தெய்வமாகவும் புதுக் கோட்டை அரசு தொண்டைமான்களின் குலதெய்வமாகவும் விளங்கும் இவ் அன்னை பராசக்தியின்பால் இவ்வாசிரியர் கொண்டுள்ள பக்தியை இப்பிள்ளைத்தமிழின் பருவந் தோறும் பாடல் தோறும் நம்மால் காண முடிகிறது

"தேடிக்கிடைக்காதே நின்றிருவடிக்கே தொண்டு
செய்திட நாளும் எண்ணி" [பக்கம்-55]

எனத்தொடங்கி "வான்மழையாய் வந்தெம்மனக்கோயில் குடிகொண்டு, அடியேனின் வன்மங்களெலாம் போக்குவாய். அன்பர் உளக்கோயில் வளர்கின்ற அம்மையே" என்னும் பாடலில் ஆசிரியர் உள்ளத்தின் வேட்கையைக் காண முடிகிறது.

சொற்பொருள் கடந்த தூயபரம்பொருளை துரியங் கடந்த துவாத சாந்த நிலையில் உணருங்கால் ஞானியர் யாவற்றையும் மறந்துவிடுவார்கள். அவ்வாறே, பக்தி உணர்வால் வெளிப்படும் பாசுரங்களில் உலகியல் பொருள் நவிலும் செய்யுட்களிற் காணும் யாப்பமைதி ஓசைமுறை இவற்றை வற்புறுத்துவதில்லை; ஆயினும் இந்நூலில் மரபு வழிவந்த புகழ் வாய்ந்த பிள்ளைத்தமிழ் நூல்களிற் காணப் படுவது போன்ற சொல் நயம், அணி நயம், கருத்து நயங் களுக்குக் குறைவே இல்லை.

தாலப் பருவம் முதற் பாடலில் அம்மையை

"பொய்யா மொழியே செந்தமிழே" [பக்கம்-19]

என விளிக்கும் இவ்வாசிரியர்

எதுகை என்னும் பாவலர்க்கு
ஏற்ற கையாய் இனிதோங்கி
என்றும் அவர்தம் மதுகைக்கு
இனிமை சான்ற துணையாகுய்

என அமைத்துள்ள கவிதை நயம் எண்ணி எண்ணி இன்புறத்தக்கதாம.

மாரியம்மையின் காரவண்ண மேனியில் சிறந்த உறுப்புக்கள் கண்ணும் கரதலங்களும் பாதமலர்களும் என்ப. இவற்றுள் அம்மையின் கைகள் சிவந்திருப்பதற்கு இவ்வாசிரியர் கூறும் தற்குறிப்பேற்றம் "அன்பர்க்குக் கொடுத்துச் சிவந்த நறும்பைந்தாமரைக்கை" என்பதாகும்

பிள்ளைத்தமிழில் அம்புலிப்பருவம் பாடுதல் மிகக் கடினமானதென்பார்கள். இப்பருவத்தை மிக எளிமையாகவும் இனிமையாகவும் இவ்வாசிரியர் அமைத்துள்ளார்.

"நீரார்ந்த நதியோடு நஞ்சு மிகவே உடைய
நாகமும் அருகிருக்க,
நணுணும் நடுக்கம நின் உடலிடைக்கண்டுமே
நங்கை நாரதர் மலையம்மை

விளையாட அழைத்தனள்" என்பது போன்ற பகுதிகள் செய்யுளின்பமும கற்பனைச் சுவையையும் தெவிட்டாமல் அளிக்கின்றன. பொதுவாக நூல் முழுவதும பக்திச்சுவை மிளிர்வதைப் படிப்போர் நன்கு உணரமுடியும்

பழநி அந்தாதி, எல்லைப்பாட்டு, நறும்பூந்துணர் முதலிய பல நூல்களை எழுதியுள்ள இவர் இத்தகு சிறந்த பிள்ளைத்தமிழ் நூலைத் தந்திருப்பது தமிழுக்கும், பக்தி உணர்வுக்கும் செய்த பெருந்தொண்டாகும். மேலும் மேலும சமயத்திற்கும் தண்டமிழுக்கும் இவர் தம பணியின் பயன் விளைய இவர்க்கு எல்லா நலமும் இறைவன் அருளவேண்டி வணங்கி வாழ்த்துகிறேன்.

அன்பன்,
கவிஞர்கோ. பாவலரேறு.
வித்துவான். ச. பாலசுந்தரம்
பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி

தஞ்சை
5—4—72

முன்னுரை

இறைவழிபாடு, எம்குடும்பத்தாரின் அகத்தேயும் புறத்தேயும் நீங்காத சொத்து. இந்நிலையில் சத்திய சோதனையில் ஆழ்த்திய அன்னை பராசக்தி எம் உள்ளத்தில் அவளே நின்று பிள்ளைத்தமிழ் பாடத்தூண்டா விளக்காளுள். சத்திய சோதனையில் வென்றது – அவளோ? நாமோ? எல்லாம் அவளே; அவள் பிள்ளைத்தமிழ் பாடல் வெளிவர எம்மைத்துணையாக்கினுள் என உணர்கிறோம்.

இந்நூலை நாரதர்மலை மாரியம்மனுக்குப் படைக்கின்றோம். "பழநி அந்தாதி" யைப்போல் இதனையும் ஏற்று வெளியிட்டு உதவிய எழில் மலர்ப் பதிப்பகத்தாருக்கு, எனது நன்றியும் வணக்கமும் உரிய. அணிந்துரை தந்து சிறப்பித்த எனது கெழுதகு நண்பர் பாவலர் திரு ச. பாலசுந்தரம் அவர்கட்கு எனது நன்றியை உரித்தாக்கி, இதனை கற்று அன்னையின் அருள் பெறவேண்டுமெனத் தமிழ்ப் பயின்றோர் எல்லோரையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

புதுக்கோட்டை
5—4—72

அன்பன்,
"சக்திதாசன்"

உ

விநாயகர் துணை.

நாரதர் மலை மாரியம்மன் பிள்ளைத் தமிழ் :-

விநாயகர் வணக்கம்

1. அன்னை பராசக்தி அன்பை நினைந்துமே
என்று லியன்றவிப் பாமாலை - முன்னின்று
சூட்டுதற்கே யான் நினைந்தேன் சூட்ட துணை
வாட்டமிலா முன்னவனே வந்து. [நிற்பாய்

முருகன் வணக்கம்

2. சக்திவேல் பெற்ற சரவணனே சக்தியினைப்
பக்தியாய்ப் பிள்ளைத் தமிழ்ப்பாட - சக்தி
என்வாழ்வில் தந்து எளிமையாய் யாம்பாட
முன்னோடி வந்திடுமுன் னே.

க. காப்புப் பருவம்

திருமால்

1 அணிகொண்ட அன்னை அமரர்தந் தெய்வம்
அன்புக்கு உறைவிடமாம்
அடியவர்கள் துன்பம் நொடியினில் போக்கும்
ஆற்றலுக் கிருநிலமாம்
பிணிகொண்ட வாழ்வில் பேதுற்று நின்ற
பேயனின் மனம் புகுந்து
பெண்தெய்வம் மாரி அம்மையை நாளும்
பேணியே இனிது காக்க,
மணிகொண்ட மால்வரை மாரியைக் காத்து,
மகிழ்வுடன் ஆநிரையை
மண்புக்கு நின்று மகிழ்வித்தமாலே
மங்கையை மார்புடையாய்,
அணிகொண்ட மாலே அறிவின் நிறைகுடமே
அன்பன் அச்சலனையே,
ஆர்வத்தால் ஏற்று அவனியிலுயர்த்திய
அருளின் நிலைக்களமே!

சிவபெருமான்

2 அருள்நிறைந்த கண்ணும் அடியவர்க்கு நல்கும்
அளவிலா கையும் வீரா
எழிலுடைய வுருவும் எளியோர்க் குதவும்
இதயமும் இனிய முகமும்
பொருள நிறைந்த சொல்லும் புலவர்க்கு நாளும்
பொய்யாக் கொடையும் ஈந்து

மருள் நிறைந்த என்றன் மனத்தகத்து ஞானம்
மலர்விக்க வந்த முதலே!
மாறனைக் காய்ந்து மலரவன் தலையோட்டில்
மாபிச்சை ஏற்ற சிவமே;
இருள் நிறைந்த உலகின் இன்னலும் உயிரின்
இடர்நீக்கும் இன்ப மறையே
இட்ட பொருள் யாவினும் நீக்கமற நிலை நின்ற
இகபரங் கடந்த சுடரே!

சித்தி விநாயகர்

3 பவப்பிணி இரிந்திட பாரினில் மருந்தென
பரவுதற் குற்ற முதலே!
தவப்பெரி தூடனுற்றி சார்தரும் கணேசனும்
சித்தி விநாயகனைத் துதிப்போம்.
நவரசம் பொங்கிட நாளும் கலை வளர
நாரதர் மலை வளரும் எம்
புவனத் தரசியை பொன்மாரி அம்மையை
போற்றிப் புரந்திடவே.

முருகக் கடவுள்

4 திருவாருந் தமிழன்னைத் தேவர் குறைநீக்குதற்கு
தெரிந்துமே பெற்றெடுத்த
உருகாதார் உள்ளத்தை உருக்கிடும் அழகனை
உயர் முருகைப் பணிந்திடுவாம்.
பெருகார்வந் தனைத்தந்து பின்னைத்தமிழ்ப்பாட
பேதுற்ற என் முன் நின்ற
நறவாரும் மலர்சூடும் நாரதர்மலை அம்மையை
நாளும் தனி காத்திடவே.

பிரம தேவர்

5 உலகைப் படைத் துயிரைப் படைத் தலையுலவ
ஒல்லும் பல்வகை யின்பத்தை
ஒன்ருய்ப் படைத்தான் உயர்தேவன்
பலகைப் படைத்து முயன்ருலும் பிறர்தாம்
படைக்கலாற்ரு திறனுடைய
பிரமதேவன் ருள்பணிவாம்.
அலகைப் பணிகொண்டரியா சனத்தமர்ந்தினி
அன்பர்க் கருள் செயக் காத்திடும் [தாய்
அம்மை நாரதர் மலைத்தலைவி
உலகைத் தமிழால் உயர்த்தும் செல்வி ஒன்ருரை
ஒடுக்கி யடக்கிப் பணிகொள்ளும்
உமையாம் அம்மையைக் காக்கவே.

தேவேந்திரன்

6 விழைந்ததை விழைந்தவர்க் களித்திடுஞ் செல்வ
வெற்றித் திருவோடு என்றும் [மும்
வெள்யானை ஊர்ந்துமே கற்பகக்காவொடு
வெண்காம தேனும்பெற்று
குழைந்த மென் சொல்லுடை இந்திராணி தன்
குழாமெனத் தேவர் காக்கும் [ளெடு
கொற்றவனை, வைரவேற் குமரனுக் கீந்திட்ட
கோ இந்திரனைப் பணிவோம்
தழைந்த தண்காவினில் தாமரைப் பொய்கையில்
தமிழ்மணம் பரப்புந் தும்பி
தாதளைந்தே வெண்ணீற்றடியா ரென
தமிழ்மறை பாடியாடும்,

விழைந்தநல் வளமெலாம் நெருங்கிடும் நன்மலை
விழைந்த பொற் செல்வி அம்மை
விண்ணவர் மனங்கொளும் வெற்றி வேற்
விரைந்து இனிது காக்கவே. [செல்வியை

திருமகள்

7 காமன் தன் கணைக்கெதிர் ஆற்றாத திருமகள்
ககனமா மழை பொழியும்
கார்முகில் வண்ணனின் மார்பகத் தொதுங்கிட
கால்களில் முத்துறுத்த
வாமனன் தேவி இஃதாற்றாது வளமார்ந்த
வண்ணத் தண்டுழாய்க் காட்டில்
விளைத்துமே உண்ணுழைந் தாற்றி இன்பம்
வளருந் திருமகளைப் பணிவாம்; [பெற்ற
பூமேவும் பொழிலார்ந்த பொய்கையும் அதன்
பொற்கு றடென ஒங்கியே [பாங்கர்
போவோர்தம் முள்ளத்தைப் பொறுக்கென-
பூதலம் காத்து நிற்கும், [வேகவர்ந்து
பாமேவுஞ் சிறப்பார்ந்த நாரதர்மலை வாழும்
பைங் கொடி மாரியம்மை
பண்பார்ந்த உள்ளத்துச் சான்றோர்களிடை
பைந்தமிழைக் காத்தருளவே. [வாழும்

கலைமகள்

8 கலையென்ற போழ்தினில் கனிவென்ற பண்போடு
காத்திட ஓடி வந்து
ககனமா மழையென கால்பல கொண்டுநீ
காவெலாம் பெருகியோடி

சிலைவென்ற வில்லியைச் சிதறியோடச் செய்த
தீவினை போக்கி நின்ற
சிற்றறிவிற் கெட்டாத செந்தமிழ் மாமணியை
சென்னியிற் சேர்த்திடுவாம்
அலைகின்ற நெஞ்சத்திற் கறிவென்ற புணையீந்து
அன்புக் கடலில் தள்ளி
அருளென்னுந் தேனமுதை அள்ளிக்
ஆருயிர்க் காத்திட்டவள் [கொடுபோந்து
மலைவென்ற நாரதர் மலை வாழும் செல்வியை
மாமறைகள் போற்றி நிற்கும்
மரகத வல்லியை, மாணிக்க மாலையை
மாரியம்மனைக் காக்கவே.

துர்க்கை

9 திரிசூலப் படையுடன் செங்கண் விழித்தொல்கித்
திரிதரும் தேவி காளி
தேடாதார் உளத்தெழுந் தேநின்று
தேடச்செயுங் கொற்றவை, [அன்னவரைத்
விரிகான கத்துகந் தேநின்று வேடுவர் தம்
விழை வெலாம் நல்குஞ் சூரி
வித்தகர்க் கெந்நாளும் நத்துங் கனவுகள்
விளைத்திட்ட துர்க்கை காக்க;
கரியார வாரமும் ககனத்து கொண்மூவின்
கலந்து பேரொலி யெழுப்ப
கண்டாரை மயக்கியே கலந்து தன்புகழ்பாட
காட்சி தந்திடு மலையாம்
பரியார வாரமும் நீங்காத நாரதர்
பழமலை இனிது வாழும்
பார்புகழும் தென்றமிழ் பைந்தொடி அபிராமி
புனமயில் மாரி அம்மையை;

பேச்சியாயி துணை

10 நாச்சியார் அம்மனும் நானிலம் போற்றிடும்
நங்கை வேத நாயகியும்
நளின மலர்ப் போது நாளுஞ்சுமந்திடும்
நம் திருவப்பூர் அம்மனும்,
ஆச்சிக் குகந்து அம்மன் புவனேசுவரி
அணிதிகழ் பிரக தாம்பாள்
அத்துணைப் பேரோடு அருகிருக்கும் அம்மை
பேச்சி யாயினைப் பணிகுவாம்
பூச்சிக்கி மாலையாய் பொலிகின்ற மார்போடு
புவன மேழுங் காத்திடும்—
பொய்கை வளர்தண் காவும் பொருப்பு
நாரதர்மலையும்
புனிதமாய் விளங்கித் தோன்றும்
நாச்சிக்கிப்புகழ் கின்ற நம்மவள், பைங்கொடி
நாளும் புகழ் மாரியம்மை,
நண்ணி யருகிருந்து நயந்து வேண்டுவசெய்து
நங்கொடியைக் காத்தருளவே.

சத்த மாதர்கள்

11 ஊழிக் காலத்துமே உலகையே யுண்டவள்
உற்ற பகைகண்டு தேரை உகைத்தவள்
உழைநின்ற மாவைப்பிளந்துயிர் உண்டவள்
ஒன்னார் பகை கடிந்த முதையும் உண்டவள்
நாழிப் பொழுதினில் பரமனை வென்றவள்
நான்மறைப் போற்றிட நாற்றிறம் கூர்த்தவள்
நானிலம் உட புகுந்தே வடிபார்த்தவள்
நங்கையர் எழுவரின் நல்லடி வாழ்த்துவோம்;

ஆழிசூழ் உலகினில் அன்பர்கள் துயரினை
ஆதவன் கண்டிட விலகிடும் பனியென
அழித்துமே அன்னவர்க் காவன முன்னின்று
அளித்திடும் அன்னை; எம் அகந்தையும்
நீங்கிட
வாழிடமாகவே வளர்ந்திடும் மலையதிற்
வண்ண மலர்த்தாள் பெற்றிடும் அம்மையை
வறியவர்க்கீந்திடும் வண்மையை, தாய்மை
வளமுடன் காக்க வென்றே. [யை

முப்பத்து மூவர்

12 காவிரி நாடுடைக் காவலன் சோழனே
ககன நிறை புகழ் பரப்பி
கண்டார்போர்க் களத்தினிற் கடிது ஓடச்
காத்துமே குடை நிழற்றி [செய்து
பூவிரி பொழில்சூழும் பொன்னிகர் மலைசூழும்
பூவில் வாழ் அயன் மகனும்
போர் விளைத்தே நெறி காட்டிடும் இசை
புண்ணிய முனி நாரதன் [வலோன்
பாவிரித்தே தமிழ் இசைமணம் பரப்பிடும்
பண்பார்ந்த பெருநிலத்தே
பாவை எங்குலச் செல்வி வீற்றிருந்தருள் செய
பார்த் தருள்வீர் காவலே!
தேவிரிந்த இருவர் எண்மர் பதினொருவரொடு
திக்கொகலாம் ஒளி பரப்பும்
தேசுடை ஞாயிறுகள் பன்னிருவர் சேர்ந்துமே
தேவர் முப்பத்து மூவரே.

2. செங்கீரைப் பருவம்

1 முன்னவன் உனைத்தொட்டுப் பன்னீரி லாட்டியே
முகிழ் குழல் முன்னுலர்த்தி
முழுமதி முகத்திரு கருவிழி யிடத்தவன்
முனைந்துமே மையெழுதி
கன்னமெனு மெழிலுடைக் கனியதன் மேல்நறுங்
கரும் பொட்டு தானு மிட்டு
கனிவான உன்றன் மலர்வாயில் முத்தினைக்
கண்டுமே உளம்பூரிப்பாய்
அன்னம் எனும் மென் நடை தன்னை நீ மேவியே
அணிமயில் சாயல் சேர்த்து
அம்புலியை எழிலாருந் திருமுடியில் வைத்துமே
அன்பருளஞ் சென்று தங்கும்
தென்னவன் நற்சேரன் சோழன் மடிவளர்ச்
செந்தமிழ்ச் செல்வி அமையே
செய்தவம் வாய்த்திட செம்மலர்ச் சீரடியாய்
செங்கீரை ஆடியருளே.

2 முன்னவன் உள்ளத்து எழுகின்ற உவகையை
முகத்தினில் இனிதுதேக்கி
மொய்குழல் அம்மையின் முன்கையைப் பற்றி
முத்தந்தா வென அழைக்க [யே
அன்னையின் மடியிடம் தோய்ந்து கிடந்துமே
அமுதவாய்ப் பாலருந்தி
அடியவ ரிடத்தினில் அருட்கண் திறந்திடும்
அங்கயற் கண்ணம்மைதான்

மென்மலர்ச் சேவடி சிவந்திட வந்தவர்
மார்பினில் சார்ந்தினிதாய்
மனநிறை வெய்திட முத்தங்கள் ஈந்திட்ட
மாரிஅம்மை உமையே
தென்னவன் சேரன் நற்சோழன் மடிவளர்
செந்தமிழ்ச் செல்வி அமையே
செய்தவம் வாய்த்திட்ட செம்மலர்ச் சீரடியாய்
செங்கீரை யாடியருளே!

வேறு

3 உள்ளத் தெழுந்த உவகைக் கடலில்
ஒட்டிய மனப்படகில்
உன்னைச் சுமந்தே உய்த்திடுங் காலை
ஓங்கிய இருமுலைதாம்
கள்ளத் தனமாய்க் கீழிருந் தெற்ற
கலங்கிநீ அவைபற்றியே
கண்மூடி ஞானப் பாலைநீ யுண்டுமே
காட்சிக் கினிதிருப்பாய்;
மெள்ளத் தனது மென்மலர்க் கையால்
மெய்தொட்டு உமையெடுத்தே
மேதினி மீதிலே விளையாட விட்டு
வியந்துமே மெய்மறப்பாள்
அள்ளக் குறையாத அமுதே! எம்அன்னையே
செங்கீரை ஆடியருளே!
அன்பருளம் என்றும் நீங்காத செல்வியே
செங்கீரை ஆடியருளே!

4 மாணிக்க மரகதப் பைப்பொன் திருமுடியினை
மங்கையுமை முன்சூட்டவே
மகளான, தேனொழுகு மலரான, நிலவொழுகும்
மதியான நின்றனுக்கே,
பாணிக்கு வெனப்புகழ் நாரதன் பனிமலாரம்
பன்மலர்க் கொண்டுவந்தே
பார்த்தெடுத் தேநினக் கேற்றதைத் தொடுத்து
பைந்தார்தான் சூட்டிடவே [மே
காணிக்கு ஐந்நூறு கலம்விளை பைஞ்சாலி
கழநியெ லாம்ஓங்கியே
களமெலாம் பொன்மலை யெனவோங்கிச் சிறந்
கனகநா ரதர் மலையில்நீ [திடும்
சேணிடத் தென்னைநெஞ் செம்மனத் தேறிநீ
செங்கீரை யாடியருளே!
செகமெலாம் வாழ்ந்திடச் செம்மலர்த் தாளினல்
செங்கீரை யாடியருளே!

5 அரவிந்தம் வென்ற அழகிய முகமதி
மருங்கிரு விழிக் கயல்கள்
அணிதிகழ் மகரக் குழல்வளர் காதளவு
அஞ்சாது ஓடிமீள
மரகதப் பச்சைப் படாம்விரித் தெனத்திகழ்
மடித்தலத் தாடைதுஞ்சும்
மாணிக்க வல்லியுமை மஞ்சார் கருங்குழலாள்
மன்னுயிர் காக்கவின்ற
அரவினை வென்றிடும் அல்குலை மறைத்திட்ட
அரைமணிச் சுட்டி சார்த்தி
அசைந்திட வெழுந்துயெம் மனத்தகத் தே
அம்மை! நா ரதர்மலைமயிலே! [நின்ற

சுரர்தமை வாழ்விக்க தோன்றிய பைங்கொடி
செங்கீரை யாடியருளே!
செந்தமி ழார்ப்பாட தூண்டா விளக்கானாய்
செங்கீரை யாடியருளே!

6 வான்மழை நோக்கியே வாடிடும் பைங்கூழின்
வாட்ட மதனை நீக்கிட
வந்துமே ஈண்டிய கார்முகில் குழாம்நனி
வளஞ்செழித் திடப்பெய்திடும்
பான்மைபோல் ஈரேழு உலகெலாம் புரந்திடும்
பார்வதி பார்த்திருக்க
பைங்கூழெனத் தவழ்ந் தங்கையி லசைந்
பனிமொழி மலையம்மையே! [தாடும்
கான்வழி நடந்துமே கைபிறழ்ந் தேகிடும்
கடையனின் வாழ்வதனிலே
கைகொடுத் தேபொன்னைக் கரையேத்திட நீயே
கடிதினில் ஓடிவந்து
தேன்மலர்த் தாரசூடி சேயிருந் தாமரையால்
செங்கீரை யாடியருளே!
செந்தமிழ்ப் பாடியே ஆடிடும் புலவர்முன்
செங்கீரை யாடியருளே!

7 புலம்வென்ற ஞானியர் போற்றித்தம் மனவெளி
பொன்றிரு மேனிசேர்த்துப் [யில்
பொற்சபை நடமாடும் நற்பெருங் கூத்தனைப்
புகழ்ந்துமே தமைமறந்து

வலம்வந்து தங்கையைத் தலைமேல் குவித்துமே
வாயாரப் பண்ணிசைத்து
வண்ணப் பசுமேனி உமையம்மை தாள் தாழ்ந்து
வணங்கிடுந் திறங்கண்டுமே
மலம்வென்ற அன்னவர் வாழ்வு மலர்ந்திட
மட்டார் குழலம்மையாம்
மலைவாழ் நாரதர், மரகத மாரியம்மை
மகிழ்ந்திட அடியவர்தாம்
நிலம்வந்து நின்றுமே நான் தாமரைப்போதால்
செங்கீரை யாடியருளே!
செந்தமிழ்ப் பாடியே ஆடிடும் புலவர்முன்
செங்கீரை யாடியருளே!

8 கார்மேகம் போந்து கடலில் நீர்முகக்கும்
காட்சியின் கரியமேதி
கட்டுக் கடங்காமல் கால்தளை நீக்கியே
கடிதுமே கனைத்துவோடி
நீர்சூழ்ந்த பொய்கை தன்னி லிறங்கியே
நீள்வரால் விலங்கறுத்து
நெடியநீர்க் கழுநீரை மேய்ந்துமே வயிறூர
நெடுங்கரை யேறியாங்கண்
பார்நிழல் தந்துமே கறிக்கொடி சுற்றிய
பலாவின் நிழலில்முல்லைப்
படுக்கையில் கிடந்துமே அசைபோட மெல்லிலை
மஞ்சள் புறந்தைவரும்
சீர்மேவு நாரதர் மலைவாழும் அம்மையே
செங்கீரை யாடியருளே!
செய்தவம் மிக்கநல் லடியவர் கண்டிட
செங்கீரை யாடியருளே!

9 கருவரை எனச்சூழ் களிறுதம் பிடியோடு
கண்துயில் இடமகன்ற
காவினில் மரமேறி கனியுண் டுதிர்த்தாடும்
கவின் மகார்வெறின் குதித்து

தருசந்தின் துணிகளின் வெந்தன கைக்கொண்டு
தாவியே யெறிந்து ஆட
தனிநிற்ற லாற்ருது அஞ்சியே தொகையாக
தப்பியோ டுங்கவரிமா,

திருவாருங் குன்றின்மேல் வருடைபாய்ந்துழக்கிட
தெண்மணிப் பலவுடைந்து
செந்துகள் சிந்தியே விண்ணுளுத் தெனக்
தேமர மெ லாம்மாற்றி விண் [காட்டி

பொருபவார்ந்து கற்பகக் காவெனப் பொலிந்
புலவன் நா ரதன் மலேவாழ் [திடும்
செறுவென்ற நங்கையே தென்றமிழ்ச் செல்வி
செங்கீரை யாடியருளே! [யே

செந்தமிழ்க் காத்திடும் தொண்டயர் குலக்கொடி
செங்கீரை யாடியருளே!

10 தண்பணே ஆம்பலும் தாமரைப் பொய்கையும்
தழைத்தே தள்ளாட
தண்ணெனும் நீர்நிலேத் தீப்பற் றியதென
தாம்நினே ந் தேயோடும்

கண்படா புள்ளினந் தஞ்சிற கர்கொடு
தாங்கியே தம்பார்ப்பை
தண்டமிழ்ச் சேர்த்துமே தாலாட் டயர்ந்திடும்
தன்மை திறைந்தோங்கும்

மண்படா மார்புடை மறவர்தம் நெஞ்சுரம்
மாற்றலர் முடிதாழ்த்தும்
மாண்புடை திறனுர் நாரதர் மலைவாழும்
மங்கை மாரியம்மை
சண்பக மலர்விரி சோலை யிடைவந்து
செங்கீரை யாடியருளே!
சொற்றமிழ் இசைமேவுஞ் சொக்கனின்
செங்கீரை யாடியருளே! [திறங்காண

௩. தாலப்பருவம்

1 பொதிகைத் தென்றலு டன்போந்து
பொங்குந் தமிழை நனிவளர்க்கும்
புதுகை மன்னர் மடிவளர்ந்த
பொய்யா மொழியே செந்தமிழே!
எதுகை என்னும் பாவலர்க்கு
ஏற்ற கையாய் இனிதோங்கி
என்றும் அவர்தம் மதுகைக்கு
இனிமை சான்ற துணையானாய்!
மதிகைக் கொண்டு புலனடக்கி
மாலும் அயனும் காணரிய
மலரே! நாரதர் மலைவாழும்
மயிலே! என்றன் மனக்கோயில்
பதியாய் விழைந்து அமர்ந்தவளே
பண்ணே, தாலே தாலேலோ
பயனே, அமுதே! பார்புகழும்
பாவாய் தாலே தாலேலோ.

2 மன்னன் தொண்டை மான் வளர்த்த
மதுரத் தமிழோ டுடன் கூடி
மலர்கள் தோறும் தா தருந்தி
மயங்குஞ் சிறுகால் வரிவண்டர்
தென்னன் பொதிகைத் தான் சேர்ந்து
தென்ற லுடனே விளையாடி
செழுங்கன் ஞண்டு துணையோடு
செறிந்தே நெருங்கிப் புணர்ந்தாலும்
கன்னல் செந்நெல் விளைகழநி
கார்சென் றணையு மலைச்சாரல்
கமழு முல்லைப் புறவமிதைக்
கனவின் ஒவ்வா வென நினைந்து
பன்னும் புகழ்நின் மலைதிரும்பும்
பயன்சேர் பாவாய் தாலேலோ
பண்ணே! அமுதே! பார்புகழும்
பாவாய் தாலே தாலேலோ.

3 அள்ளற் பழனத் தசைந்தாடும்
அளிசேர் எழிலார் அரக்காம்பல்
அலர்ந்தே செய்ய நிறம்பரப்பி
அனலின் பிழம்பாய்க் காட்சிதரும்
வெள்ளப் பெருக்கே தீப்பட்ட
தென்றே வெருவித் தஞ்சிறகால்
வெம்மைக் காற்றுத் தம்பார்ப்பு
விரைந்தே எடுக்கும் எழிலார்ந்த
புள்ளின் இனமே ஒலிபெருக்கும்
பொய்கை நிறைந்த மலையிடத்தே
பொற்று தரும்பி கொன்றைமலர்
புலியே யென்ன மதிமருட்டும்

கள்ளின் மணமே பரப்புந்தார்
கலையே, கவினே, தாலேலோ
காண்பார் உள்ளம் கவர்ந்திடும் நற்
கரும்பே தாலே தாலேலோ.

4 கொண்டல் உவரி தனிற்புகுந்து
கொள்ளும் அகடு நிறைத் தெழுந்து
கோல வான மறைத்திடும்
கொடுஞ்சூ லுடைந்து சிதைந்திடவே
வண்டல் உகைத்தே செருக்கி
வயல்க ளெல்லாம் புலால் மணக்க
வாளை மீன்கள் மேலெழுந்து
வான முகட்டை நனி பிளந்து
அண்டம் நெருங்கி விண் மீன்கள்
அலரத் தாக்கி அவை யொழித்து
அப்பா லுள்ள எவை தாமே
ஒப்பா மென்றே விளையாடும்
தண்டார் நாரதர் மலைக்கரசி
தமிழே தாலே தாலேலோ
தம்மை அடைந்தார் தமைகாக்கும்
தமிழே தாலே தாலேலோ.

5 பண்டோர் உழத்தி நாற்றுநட
பவள வாயால் பண்ணிசைத்து
பாதத் தாமரை வயல் சேர்த்து
பைய அன்ன மென நடந்து

தண்சேர் வயலில் பைங்கூழை
சாய்த்து நடமே செங்காந்தள்
தன்னைத் தேடி வந்ததெனத்
தாவிக் கொட்டும் மென் விரல்கள்
தண்டா தூதும் பொறிவண்டர்
தன்னைத் தேடும் மை விழிகள்
தம்மை ஒவ்வோ மெனக்கரந்து
தாட்கீழ் உறையும் கயல்கள் விளை
பண்டேர் நாரதர் மலைக்கரசி
பண்ணே தாலே தாலேலோ
பாரோர் புகழும் மெய்ஞானப்
பாவாய் தாலே தாலேலோ.

6 உழவால் உலகைப் புரக்கின்ற
உழவர் நாளும் தம்வயலில்
ஓயா துழைத்து நெல் விளைத்து
உயர்போ ரமைத்து மேலிருந்து
விழவாம் யானைப் போரடித்து
வேண்டுஞ் செந்நெல் களஞ்சேர்த்து
வையம் புரக்கும் தொண்டைமான்
விழைவை நிறைத்துச் சகடத்து
முழவ மதிர மனைசேர்த்து
முட்டா தறஞ்செய் வேளாண்மை
முழுதுஞ் செழிக்கும் மலைப்பாங்கர்
மொய்வீ கூந்தல் எம்பாவாய்!
மழவெங் களிற்றின் நிரைநீங்கா
மலைவாழ் செல்வி தாலேலோ
மன்னார் தொண்டையர் குலவிளக்கே
மயிலே தாலே தாலேலோ.

7 வான முகட்டைப் புடைத்தோங்கும்
வளிவீழ் நெடும்பொற் குன்றத்தே
வைவாள் நீங்கா கானவர்தாம்
வழிசெய் நெடுநெறிப் புறம்போந்து
கானம் இசைக்கும் பொறிவண்டர்
கனிவாய்ச் சேர்த்த மலைத்தேனைக்
கண்டே பெருந்தீக் கொடுசேர்ப்பர்
கசியும் நறுந்தேன் தனைக்கீழே
தானந் தமக்கே என நினைந்து
தனித்தே நக்கும் முடமந்தி
தனையே புரக்கும் நெடுமலையாம்
தகைசால் நாரதர் மலைவாழும்
ஞானம் வழங்கும் நற்செல்வி
நங்காய் தாலே தாலேலோ
நமனை வெல்லும் திறலுடையோய்
நங்காய் தாலே தாலேலோ.

8 காலைச் செவ்வான் கதிர்பரப்பி
கனிவாய் உலகைக் காத்திடவே
கந்தன் கருணை யோடுநெடுங்
கடலிற் றோன்றி எழுமாபோல்
நீலத் திறையே பின்னுக
நீள்செம் பிழம்பு பின்னுக
நின்ற செஞ்ஞா யிறுதானும்
நெடிய நின்றன் மலைபார்த்து
கோலக் குளிர்தண் மதிபார்த்து
கொஞ்சும் மலைநிற் கடப்பதற்குக்
குறியா தழுந்தி முகில் மறைக்குங்
கொழுந்தே தொண்டை மான் குலவிள

காலங் கடந்த நற்செல்வி
கண்ணே தாலே தாலேலோ
கவிஞர் பாவின் நறுஞ்சுவையே
கண்ணே தாலே தாலேலோ.

9 தாழை மடலின் தாதுதிர்த்தே
தண்ணீர்த் துறையின் நிறம்மாற்றி
தணியா புலாலின் முடைநாற்றம்
தணித்தே நாளும் மணம்பரப்பும்
வாழைக் கனியே நனியுண்டு
வழங்குந் தேமா பின்னுண்டு
வையம் காக்க காகாவெனும்
வெவ்வாய்ச் சாய்கண் கருங்காக்கை
ஊழை வெல்ல நினைந்தேயோ?
உழைதண் புனலில் துழைந்தாடி
ஒளிர்வெண் மணலில் தான்புரண்டு
ஒண்தா தணிந்தே வெளுத்ததுகண்(டு)
ஏழைப் பேடை நனிபுலக்கும்
எழிலாம் நாரதர் மலைக்கரசி
எங்கள் செல்வி தாலேலோ
எழிலே சுவையே தாலேலோ.

10 ஓங்கியுயர்ந்த தேமாவும்
ஒளிர்செம் பாளைப் பைங்கமுகும்
உயர்ந்தோர் நன்றிக் கடன்காட்டும்
ஒழியா இளநீர் உயர்தெங்கும்

பாங்கின் ஒருபால் பயனளிக்க
பாரோர் நாளும் பசிநீங்க
பயன்சேர் செந்நெல் தீங்கரும்பு
பாவைக் கேற்ற நன்மஞ்சள்
தாங்கி நின்றே உயிரோம்பும்
தண்ணார் பழனந் தான்சிறந்து
தள்ளா விளையுள் நனிபயக்கும்
தகைசால் நாரதர் மலைக்கரசி
ஏங்கி நின்னை நினைப்பார்க்கு
எளிதாய் அருள்வாய் எந்தாயே
எங்கள் செல்வி தாலேலோ
எழிலே சுவையே தாலேலோ.

4. சப்பாணிப் பருவம்

1 கொக்கின் வெண்மை மேல்மறைக்கக்
குறித்து நின்றே தவமிருக்க
கோதி பைந்தேன் நனியுண்ணா
கூம்பும் அல்லி எனநினைந்து
பக்க மிருந்த பெருவரால்தான்
பைய அதன்வாய் உட்புகுமே!
பைந்தேன் கடைவாய் நனியொழுக
பைங்கண் எருமை வாலாட்டி,
நக்கும் நாவால் அதன்பாங்கர்
நளின மலர்வாய் நனிசிரிக்கும்
நந்தா வயல்சூழ் பெருமலைகள்
நாடிக் கிடக்கும் நின்னூரில்

திக்கும் மணக்குஞ் செந்தமிழே!
கொட்டி அருள்வாய் சப்பாணி
தீந்தமி ழோடு பிறந்தவளே!
கொட்டி அருள்வாய் சப்பாணி.

2 வெள்ளி முளைத்த தெனவெழுந்து
விடியற் காலை ஆயர்மகள்
வெடிக்கு முல்லை யெனநிகர்க்கும்
வெண்ணெய்த் தயிரைத் தாழியுடன்
அள்ளித் தெரிக்கும் நெடுமத்தால்
அருகி லுள்ள தூண்சேர்த்து,
அம்மா நீயு மெழுந்திராய்
ஆவுங் கன்று மெழுந்தனகாண் !
வள்ளி உனக்கா வந்துநின்றாள்
வாய்த்த ஆவின் பால்கறக்க
வண்ண மலர்க்கை கயிறிழுக்கும்
வளரும் ஒலியோ கடல்நிகர்க்கும்
கிள்ளை வாழும் மலைக்கரசி
கொட்டி அருள்வாய் சப்பாணி
கிளர்செந் தமிழே எந்தலைவி
கொட்டி அருள்வாய் சப்பாணி.

3 ஆயன் சகடந் தனில்பூட்டி
அன்பாய் எருதை அமர்ந்தோட்டி
அண்மைப் புறவம் விளைவரகு
அறிந்தே ஏற்றித் திரும்பிடுவான்

காய வைத்தே அவைகுற்றி
கடிதாம் அரிசி தனை உலையில்
கண்ணி முல்லை நிகர் முறுவல்
கனிந்தே பூத்துச் சோறட்டு
சாய பொழுது வரால்உணக்கி
சமைத்தே கீரை யுடன்சேர்த்து
சாமை குற்றுந் தன்கையால்
தமர்சூழ்ந் துண்ண முகமலர்வாள்
தாயவன் தான் நினைத்தொழுவாள்
கொட்டி அருள்வாய் சப்பாணி
தீந்தமிழோடு பிறந்தவனே
கொட்டி அருள்வாய் சப்பாணி.

4 கன்று பிறந்தக் கால்பிறந்த
கனிவாய்ப் பிள்ளைக் கண்ணெனவே
கருத்தாய் வளர்த்தாள் கன்றையுமே
கன்னிப்பருவம் வந்துற்ருள்
மன்று மருள அவிழ்த்தோட்டி
மயிலைக் காளைப் கொள்வோனே
மாலை சூட உரியவனும்
மயக்குங் காளைப் பற்றிடுவான்
நன்று சொன்னேன் எனத்தந்தை
நாடு கேட்க நவின்றனனே!
நாளுங் காளைக் கொள்வார்கள்
நாட்டும் பறைதான் கேட்டிடுமே
என்றும் உன்றன் எழில்மலையில்,
அருளே கொட்டுக! சப்பாணி
அன்பின் வடிவே செந்தமிழே
அருளே கொட்டுக சப்பாணி.

5 முல்லை மலர்கள் பூத்துதிர
முகில்கள் பெய்து இடித்துமின்னி
முடங்கிக் கிடக்கும் ஆய்ச்சியர்க்கு
முன்னே யுணர்த்தும் கோவலர்தாம்
ஒல்லை விரைந்தே தேரேறி
ஒன்னார் களம்விட் டிவண்வருவார்
ஒசிய மெல்லிடைத் துகில் சேர்த்து
ஒண்முகம் நகைசேர்த் தெழுவீரே
சொல்லை ஏற்பீர் எனக்கூவும்
சோலை மாங்குயில் பின்னின்றே
சொன்ன நாட்கு முன்னாக
துயர் துடைத்திட அவர் வருவார்
கொலலை மணக்கும் ஊர்க்கரசி
கொட்டி யருள்வாய் சப்பாணி
குவலயம் வாழ வழிகாண்பாய்
கொட்டி யருள்வாய் சப்பாணி.

6 வான் முகட்டை நனிமுட்டி
வளர முடியா நெடுந்தெங்கு
வணங்கித் தலையில் இளநீரை
வையம் உண்ணப் பெரிதளிக்கும்
கானப் பெருக்கும மலைப்பெருக்கும்
கலந்து மிகுந்து காட்சிதர
ககனந் தாவும் வானரங்கள்
கடிதின் கூன்பிறை கைப்பற்றி
ஊனக் கிம்புரி கொம்பொடித்து
உரலில் தினையை இடிப்போர்க்கு
ஒத்த திதுவே எனக்கொடுக்கும்
உள்ளுங் காட்சி நினைதிடமே

கானத் தெருமைமேல் நின்றாயால்
கொட்டி அருள்வாய் சப்பாணி
கன்னித் தமிழைத் தேர்ந்தவளே
கொட்டி அருள்வாய் சப்பாணி.

7 கொன்றை மலர கொங்குதேரும்
குளிர்வாய் வண்டர் குடைந்துதிர்க்க
குன்று தோறும் மணம்பரப்பி
குறைதீர் தென்றல் அலைக்கழித்து
அன்றைப் பொழுதே அவண்தாவும்
அறைவாய்ப் புலியே யெனநடுங்கி
அன்பின் துணைதேர் கலைமானும்
அகன்றே வெகுண்டு அடித்தாவும்
குன்றின் முழைவாய் நெடுவேங்கை
கோல மலர்கள் தேன்துளிக்கும்
கொய்யா மலர்கள் கொய்தோர்க்கு
கோடி இன்பம் பெய்தளிக்கும்
கன்றின் ஒலிகேட் டோடிவரும்
கண்ணே கொட்டுக சப்பாணி
கருதும் அடியார் துயர்துடைக்கும்
கருமபே கொட்டுக சப்பாணி.

8 காரும் வானும் கலந்தோங்கு
காவின் நெடும்பூச் சரக்கொன்றை
கள்வார்ந் தொழுகும் சண்பகமும்
கடியே கமழு மகிழம்பூ

சாரும் பாங்கர் கோவலர்கள்
சார்ந்தே ஆநிரை தனைவிடுத்தே
சாய்ந்து கிளைமேல் குழலூத
சுமந்த பன்மலர்ப் பசுவொன்று
ஆருங் கொல்லை வரகினையே
அங்கே வந்த கோவலனும்
ஐயோ புலியென் றேயலறி
அழைத்தே குவனே ஆநிரையை
ஊரும் நடுங்குஞ் சிறப்புடைய
உமையே கொட்டுக சப்பாணி
உண்மை எனக்கு உணர்த்திட்ட
ஒளியே கொட்டுக சப்பாணி

9 தண்ணென் சோலைத் தளிர் பறித்தும்
தரையின் மண்ணாற் சோறட்டும்
தமராச் சூழ பெண்களுடன்
தாவி அன்னம் மயில்புருவாய்
நண்ணும் ஆயம் அளவைபற்றி
நாளும் தாமரைக் குவளையினை
நன்ருய் மறைப்ப தெனஒப்ப
நங்கையர் கண்கள நனிபொத்தி
பண்ணும் இசையும பயின்ருடி
பழகும கிளியும் முத்தாடி
பசுமைக் காந்தள் கைசிவக்க
பாவை யோடு கழங்காடி
கண்ணும் மனமுங் கவர்ந்தவளே
கொட்டி அருள்வாய் சப்பாணி
கனிவாய் என்றன் மனம்புகுந்தாய்
கொட்டி அருள்வாய் சப்பாணி.

10 ஏழின் னிசையாய் என்னாளும்
இசையின் பயனாய் அன்பாது
இதயந் தன்னில் நீங்காத
இன்ப ஊற்றாய் உலகேழும்

ஊழில் உன்றன் திருவருளால்
இயக்குந் திறத்தாய் எளியோர்தம்
இயல்புக் கேற்ப அவர்தொழவே
எங்கும் நிறைந்தாய் இங்குற்றாய்

ஆழி சூழ்ந்த இவ்வுலகில்,
அறிவால் திறலால் அன்பதனால்
அவாவி நின்றேன் நினைக்காண
அருளே நின்றன் மலர்க்கரத்தால்

வாழி என்றே அருள்சுரந்து
வளமாய்க் கொட்டுக சப்பாணி;
வண்ணத் தமிழே ஓவியமே
வாழ்த்திக் கொட்டுக சப்பாணி.

5. முத்தப் பருவம்

1 கத்தும் நுணற்கு மனமுடைந்து
கழனி வளைவாய்ப் புகுமலவன்
கருங்கண் துணையின் வருகைக்குக்
காத்துக் கிடந்து சேற்றடைக்கும்;

தத்தும் தவளைப் பாந்தளின்வாய்ச்
சாரும் இன்னல் தனைத் தடுக்க
தன்கா லுகிரால் பொறியலவன்
தான்பின் சென்று வாய்கிழிக்கும்

முத்தஞ் சிந்தும் கரையருகே
முன்றன் துணையைக் காணாது
மொய்த்து மூடும் வளைகண்டு
முனகிப் புலந்து மூச்சயிர்க்கும்
சித்தங் கவரும் எழிலரசி!
செவ்வாய் முத்தந் தருகவே,
செங்காந் தள்வளர் மலைக்கரசி
செல்வி! முத்தந் தருகவே.

2 கொந்தார் சூடுங் கோமளமே!
கொடுக்குந் திறனில் நின்போல
குவலயந் தனனில் அன்பர்க்குக்
கொடுத்துக் கொடுத்துச் சிவந்தநறும்
பைந்தா மரைக்கை ஏற்றவளே!
பண்புக் கடலே பைங்கிளியே!
பரவும் அடியார் துயர்துடைக்கும்
பண்ணே தமிழே பண்ணிசையே!
நைந்தார் தம்மை நீநிறுத்தி
நிலையாய் வாழ்வு தானளித்து
நித்தம் அவர்தம் துணையாகி
நிலைத்த செல்வந் தனையளிக்க
முந்தார் வங்கொடு நின்றவளே!
முன்னே முத்தந் தருகவே
முனிவர் போற்றும் முழுமுதலே!
முன்னே முத்தந் தருகவே.

3 திக்கும் புகழுந் தமிழ்ச் செல்வி!
செல்வங் கொடுக்கும் நற்பேறே!
தேக்கு மடியார் உள்ளத்துச்
சென்று புகுந்த திருவிளக்கே!

சொக்க நாதன் தென்மேற்கில்
துணையாய் மீனாட் சியுடனே
சொல்லைக் கேட்கக் காத்திருப்பான்
தொலையா மேலோன் தொல்தமிழோன்
இக்குங் கசக்கும் மொழியுடையாய்
இழுக்குங் காந்த விழியுடையாய்
இன்னல் தவிர்த்து எளியோரின்
ஏக்கந் தீர்க்குந் திறலுடையாய்
விக்கும் நின்றன் முத்தம்பெற
விரைந்து முத்தந் தருகவே
விண்ணோர் போற்றும் விழுத்துணையே
விரைந்து முத்தந் தருகவே.

4 அம்பு மலரால் தொடுத்திடுவோன்
அழகன் அவனே திருமாறன்
அரிதாய் அவன்றன் திறங்காட்டி
அழிந்தான் முக்கட் பெருமானால்
சம்பு கேசுரர் தமிழாகித்
தழைத்த அகிலாண் டேசுவரி
தனித்தே இருவரும் நின்னழகில்
தவித்தே மறந்தார் தம்நிலையை
வம்பார் தண்ணென் மலர்ப்பெருக்கும்
வளமார் சோலைத் தென்கிழக்கே
வாய்ந்த கோயில் தனில்நின்று
வாய்க்கும் முத்தங் கேட்டேங்கி
உம்பர் நாளுந் தொழுஞ்செல்வி
உவந்து முத்தந் தருகவே.
உலகு புரக்க வந்தவளே
உவந்து முத்தந் தருகவே

5 மங்கள நாயகி மகிழ்ந்திடவே
மலர்க் கடம்பின் மணங்கமழும்
மன்னன் இறைவன் கடம்பவன
மகேசு வரன்தான் இனிதிருக்கும்
திங்கள் சென்னி சூடுமலை
தேவர் நாளுங் கூடுமலை
தேவன் நாரதன் தேனிசையைத்
தேர்ந்தே நின்முன் பாடுமலை
எங்கள் குலமே ஓங்கிடவே
எம்முன் வந்தோய்! நின்மலையே
எளியோர் வாழ்வின் துயர்துடைப்போய்!
என்னே உன்றன் அருட்டிறமே
மங்கள வல்லி முகிழ்நிலவே
மதியே முத்தந் தருகவே
மாண்ப மிக்க தமிழ்க்கடலே
மதியே முத்தந் தருகவே.

6 உலகந் காக்கும் உமையவளே
உன்றன் எழிலாம் உயர்மலையை
உவந்தே கோட்டை மீதமர்ந்து
உலையா அன்பின் காத்திடுவோன்
நிலவும் பேரொளி அறிவாற்றல்
நிறைந்த மேலோன் கோட்டைமுனி
நினைத்தால் அவன்றன் அருட்பேறு
நெஞ்ச மெல்லாம் நெக்குருகும்
குலவுஞ் சான்றோர் கொள்கைவளர்
குறுமுனி கள்பலர் கூடிநின்று
கொஞ்சும் நின்றன் எழில்முகத்தில்
கோடித் திங்கள் நிலவுமிழும்,

பலவுங் கண்டு நின்ருர்க்கு
பண்ணே முத்தந் தருகவே
பயன்கள் பலவும் நல்கிடும்எம்
பழமே முத்தந் தருகவே.

7 மேற்குத் திசையில் மேன்மையுறு
மருந்தாய் வாழ்வினை மனமகிழும்
மகவாய் நின்று மன்னர்பலர்
மண்டி யிட்டே நினைடியில்
சேர்க்கும் முடிகள் பலவாகச்
செய்தே நின்மலை காத்திடுவான்
செய்யன் ஐயனார் நினைந்து
சென்று அவன்ருள் சேர்த்திடுவர்
யார்க்கு மஞ்சா எழிம்மந்தி
ஏறி மாவின் கனியுதிர்க்கும்
எழிலார் சோலை எங்குநிறை
எல்லை யிலலால் பெருமலையில்
ஆர்க்குஞ் சிலம்பொடு திரிபவளே
அம்மே முத்தந் தருகவே
அணியார் பாதச் சிலம்பொலியாய்
அம்மே முத்தந் தருகவே.

8 போதார் தூலார் மெல்லிடையார்
புவனங் காக்கும் நின்றனுக்குப்
பொழுது புலர்ந்த அவ்வேளை
பொன்னங் கதிர்கள் தான்பரப்பி

தாதார் மன்றந் தனைச்சிக்குமு
தழலோன் மேலோன் வரவறிந்து
தங்கக் குடத்தை இடைதூக்கித்
தளர்ந்த நடையார் நடந்திடுவர்
நாதா வென்றே நவின்றவுமை
நலியா வண்ணஞ் சடைமறைத்து
நாளு மகிழும் வான்கங்கை
நதிக்கே அவர்கள நீரெடுக்க;
தீதார் மக்கள் துயர்துடைத்த
தென்றல் முத்தந் தருகவே
தென்னன் தொண்டை மான்வளர்த்த
தேனே முத்தந் தருகவே.

9 மக்கள் துன்பம் முன்னின்று
மகிழ்ந்து தீர்ப்பான் அவன்றன்னை
மனத்தால் நாளும் நினைந்துபல
மலரால் தன்னை வணங்குவர்க்கு
முக்கண் முதல்வன் ஐங்கரனே
முன்னைக் கண்ட முழுமுதலே
முத்தம் சிந்தும் நின்மலைவாய்
முனைந்து கீழ்ப்பால் அமர்ந்திருந்தான்
தக்கன் யாகந் தனைக்காணுத்
தகையோன் நின்றன் தனிமலையில்
தனித்தே நின்றன் எழில்காணத்
தவித்தே நின்முன் ஒருபாங்கர் ;
மிக்க தவங்கள் கண்டவளே
மின்னே! முத்தந் தருகவே,
மேலோர் போற்றுந் தவமகளே
மின்னே முத்தந் தருகவே !

10 உலகி லுள்ள தெய்வமெலாம்
ஒருங்கே நின் றன் உயர்மலையில்
உவந்து வந்தே நின்னழகை
ஒழியா விருந்தாய் நனிபருகும்
நிலவின் ஒளியும் நின் றன்முகம்
நெகிழ்க்கும் ஒளிக்கு நிகராமோ ?
நின்றே அவர்கள் நிலையிழந்து
தெடிதாம் பெருமூச் செவிடுவார்.
பலவாம் பின்னற் றனைக்கண்ட
பல்பூந் துணர்வாழ் குழலுடையாள்
பலரும் இருங்குழல் நாயகிஎனுப்
பகரும் அவளும் பார்த்தயிர்த்தாள்
உலவா எழில்சேர் உமையவளே
உவந்தே முத்தந் தருகவே
உலகோர் பரவும் ஒண்டொடியே
உவந்தே முத்தந் தருகவே.

6. வருகைப் பருவம்

1 நாளும் அவளை நினைவார்க்கு
நல்கும் திருவாம் திருமகளும்
நலமார் கல்வி தனை நினைந்து
நாடும் மனிதர் தம்மைஉயர்
ஆளும் கல்வி ஞானம்நனி
அருளுந் தமிழாம் கலைமகளும்
அன்பர் உளமாம் மனக்கோயில்
அமரும் ஞான ஒளிவிளக்காம்

தாளூ முடியுங் காணயிலாத்
தகையோன் துணையாம் மலைமகளும்
தங்கி ஆங்கே தவமிருக்கும்
தண்ணூர் சோலை மலைவளரும்

ஆளூந் தமிழே அருட்கடலே
அமுதே தேனே வருகவே
அடியார் உளத்து அமர்ந்தநறும்
அமுதே வருக வருகவே.

2 வானத்து வெண்ணிலவு வலமிடிக்க
வாய்க்குமின் பலாக்கனியும் வடிக்குந்தேனும்
வரிசையாய் உயர்ந்தோங்கும் முடித்தென்னை
வளமார்ந்த கலிசிந்த முகிலுந் தாக்கும்.

கானத்துப் பேரொலியாய்க் கடைநாள் ஊழிக்
கருப்பந்தான் சிந்திமிக கால்தான் தாக்கும்
கலங்கிடவே உயிரினங்கள் கருணைத் தாயே
கடிதாக நீவிரைந்து ஐம்பூதங்கள்

தாளெத்து நின்றநிலை நீக்கி மண்ணில்
தானேயாய் நீயொருத்தி தாங்கிநிற்பாய்
திடமார்ந்த சோலைசூழ் தண்மலையிலெம்
தமிழேகாண் உன்புகழை நாங்கள்கேட்போம்

தேனொத்த மொழியுடையாய் தென்றலாலே
தெளிவிக்கும் உயர்குணத்தோய் வருகநீயே
தொண்டையர்தம் குலவிளக்கே எந்தாய்நீயே
தொழுமடியார் குறைநீகக வருவாய்நீயே.

3 அண்ட முகட்டைத் தன்கையால்
அதிரத் தாக்கி அணிவரையை
அசைய நகர்த்தும் கொம்புடைய
ஆண்மைக் களிற்றின் மிகுநிறையும்
கண்ட மெழுப்பும் பேரொலியால்
ககன மதிர்ந்து பன்மீன்கள்
கானத் திந்திர கோபமெனக்
காண உதிரக் கணநிறையும்
பண்டெப் பொழுதும் பார்த்தறியா
பார்வை மான்கள் இடந்தேடி
பதைத்தே நின்றன் திருக்கோயில்
பார்த்துக் கிடக்கும் பெருநிறையும்
வண்டார் போதாய் உகந்தவளே
வண்ணக் கிளியே வருகவே
வாழ்வுதரவே அவைகாப்பாய்
வளமே தமிழே வருகவே.

4 குயில்கள் சோலை யிடைநுழைந்து
கோதும் மலர்கள் தேன்சிந்தும்
கோல மென்வாய்த் தேன்சிட்டு
குனிந்தே வாய்பிளந்தே குடிக்கும்
மயில்கள் வானில் ஒளிமறைக்க
மகிழ்ந்தே கலாபம் தனிவிரித்தே
மழைசேர் மேகம் வந்ததென
மயங்கி அகவி அகங்களிக்கும்
அயில்வேல் நிகர்த்த கிணற்றல்லி
அழகன் வேலின் ஒளிமறைந்த
அணிவான் மேலே வெண்மதியும்
அணைந்த துன்னி நனிமலரும்

வெயில்கண் டறியா நின்பொதும்பர்
விழைந்தே அன்றாய் வருகவே
விழைந்த அடியார் துயர்போக்கும்
விளக்கே வருக வருகவே.

5 காலைக் கதிரோன் கீழ்க்கடலில்
கற்றைக் கதிரைக் கருநீல
கவின்சேர் ஆடைத்திரை மேலே
கனிவாய்ப் பரப்பி உலகெழுப்ப
வேலைக் கையில் தாங்கியவன்
விரைந்தே மயில்மீ தேயமர்ந்து
விளங்குஞ் செஞ்ஞா யிறுவெனவே
விழைந்து வந்தே வந்தான்கொல்?
சேலைக் கண்ணு யுடையவளே
செம்பருத்தி மலர்போலச்
சிவந்த ஆகங் கொண்டவளே
செய்யோன் கண்டேன் நின்மலையில்
ஆலைக் கரும்பின் மொழிநிகர்த்தோய்
அடியார் காண நீவருக
அன்பின் வடிவங் கொண்டவளே
அம்மே வருக வருகவே.

6 வெண்டா மரையின் நறுந்தேனை
விரும்பிச் சுரும்பர் மீதமர்ந்து
விடுதற் கரிய குடிப்பெருக்கால்
விளைந்த மயக்கில் தாதளைந்தும்

வண்டா னங்கள் மடல்தாழை
வாய்த்த போதின் மேலிருந்து
வரால்கள் உண்ணக் கிடைக்காமல்
வறிதே மயங்கி உள்சாய்ந்தும்
தண்டார் கொண்டே நின்னடியைச்
சாடும் அடியார் வெண்ணீற்றுத்
தவக்கோலத்தைக் காட்டிநிற்கும்
தணியா அன்பால் உயிரினங்கள்
கண்டே தேனே கவின்மலையின்
கற்பக வல்லி வருகவே
கனிவார் உள்ளம் நனியுவக்கும்
கற்பக வல்லீ வருகவே.

7 அன்பே போதும் எப்போதும்
அழுவார் தங்கள் அகப்போதும்
அன்னை நின்றன் அடிப்போதில்
அளித்தால் போதும்; அடியவர்கள்
முன்னெப் போதும் கண்டறியா
முகிழ்த்த மலர்கள் முப்போதும்
முனைந்து நெஞ்ச மலர்சேர்த்து
முன்வந் தால்நீ முதலாவாய்.
என்பும் போதா உருகியுள்ளம்
எழுந்தார் நின்றன் திருவடிக்கே
எல்லா வாழ்வும் நீயளிப்பாய்
ஏற்பாய் காப்பாய் அருள்தருவாய்
உன்பால் வந்தேன் ஒண்போதே
ஒளியே தமிழே வருகவே
ஓங்கி யுயர்ந்த மலைவாழ்வோய்
ஒளியே தமிழே வருகவே.

8 முருக்கஞ் சினையின் மேலிருந்து
முன்னங் காணு வகைத்தேனை
முதிர்ந்த அலகால் மலர்க்கோதி
முற்றும் உதிர்த்து நரகணமாம்
இருக்க ஆங்கே இடந்தேடி
ஏனம் நிழல்வாய்ப் படுத்துறங்கி
எல்லா மலரும் அதன் புறத்தே
ஏற்றுக் கரிய நிறமாறி
உருக்குஞ் செய்ய நிறம்பெற்று
உறுமிக் கூறட்டை நெடிதுவிடும்
ஒல்காக் கரக்கை புறம்போந்து
ஒழியா இன்னல் உவந்தளிக்கும்
பெருக்கம் அதனை நீதவிர்ப்பாய்
பெண்ணே நங்காய் வருகவே
பெருமைக் குரிய வாழ்வேபெரும்
பேறே வருக வருகவே.

9 நீர்வாய்க் கமலம் நெடிதிருந்து
நினைந்து நின்றன் அடிசேர
நின்றே தவமே மேற்கொள்ளும்
நிலையா வாழ்வை நெடிதுணர்ந்தும்
பார்மேல் முல்லைக் கொடியமர்ந்து
பனிவாய் அரும்பு நினையடைய
பார்த்தே காலம் மாலைவாய்ப்
பனிவாய் மலர்ந்தே பல்லிளிக்கும்
கார்மேல் தவழ கங்கைவளர்
கரிய நீலம் தண்மதியில்
கனிவாய் மலர்ந்தே நினையடையக்
காத்துக் கிடக்கும் இம்மலர்கள்

சார்வார் தமக்கு வாழ்வளிக்கும்
சமய முதலே வருகவே
சாரார் தம்மைச் சார்விக்கும்
சமய முதலே வருகவே

10 உள்ளத் தமர்ந்தே ஒளிவிளக்காய்
ஓங்கும் என்றன் மதமழித்து
ஒன்று ஐம்புலச் செறுக்கடக்கி
உய்யும் வழியே நீகாட்டி
வெள்ளப் பெருக்கா நீர்வார்கண்
விளங்க வெம்மனத் துள்ளடக்கி
வியர்த்துப் புளகாங் கிதமெமக்கு
வைத்தே யருகில் காத்துநின்றாய்
அள்ளற் பழன மெம்முடம்பாம்
அழல்சேர் காமப் பெரும்பிண்டம்
அதனை நின்றன் திருவடிசேர்
அலராய்த் தூய மலராக்கி
மெள்ள என்றன் மனஞ்சேர
மின்னே! மயிலே வருகவே!
மேவும் அடியார் மனக்கோயில்
மின்னே மயிலே வருகவே.

7. அம்புலிப் பருவம்

1 விண்ணிற் றவழ்ந்து வெண்ணிலவே
விடுத லறியா ஆயமெனும்
விண்மீன் பலரோ டிறுமாந்து
விடியும் வரையில் நீதிரிவாய்

மண்ணில் வாழும் உயிர்களெல்லாம்
மகிழ்ந்து இன்பந் திளைத்திடவே
மலரும் பொழுதுந் தனை நோக்கி
மதியே! கதிரோன் திசைகாண்பர்.,
எண்ணில் நினது பெருமையெலாம்
இயங்கும் விண்ணில் நிலையொன்றே,
இயைந்த வாழ்வு பெறவேண்டின்
இறங்கி வந்து எந்தலைவி
கண்ணின் மணியாம் கனிமொழியாம்
கற்பகத் தோ டாடுகவே
கழைவளர் மலைவாழ் கனிமொழியாள்
கற்பகத் தோடா டுகவே.

2 நாடும் அடியார் துயர்துடைத்து
நாளும் அவர்க்கே வாழ்வளித்து
நந்தா வகைசெய் நம்பெருமான்
நலஞ்சேர் சென்னி முடிச்சடையில்
ஆடும் அரவும் அருகிருக்க
அஞ்சி யஞ்சி அம்புலியே
அயர்ந்து தேய்ந்து பிறையாகுய்
அவன்றன் னளியில் அங்குறைந்தாய்.,
வீடு பேறு பெறுவதற்கே
விழையு மடியார் அம்மலையில்
விரைவில் வந்து காத்துநின்று
விடியும் வரையில் கண்ணுறங்கார்
ஓடும் பிறையே அம்புலியே
உவந்து வந்து ஆடுகவே
ஓங்கு புகழ்சேர் அமையோடு
உவந்து வந்து ஆடுகவே.

3 மதநீர் பெருக்கிடும் மழகளிற்றின்
மாவுரி போர்த்தவன் மாமறையோன்
மறையோன் காணு முடித்தலையில்
மதியே கரந்து பிறையாளுய்
நிதமும் அடியார் கைபடவும்
நீரும் மலரும் பெய்திடுவார்
நேரும் செம்பஞ் சுறுத்திடவே
நினைந்தே சிவந்திடும் அடிநோக்கி
ஏதமே யில்லா இடம்நோக்கி
எழுந்தே திருமால் எழிற்குமரன்
இனிய தண்குடை யாய்நின்ருய்
என்னே ! அம்புலி நின்னிலைமை,
நதனே மகிழும் நம்செல்வி
நயந்தே வந்து ஆடுகவே
நாளும் உனக்குத் துணையாவாள்
நயந்தே அம்புலி ஆடுகவே

4 ஏரார்ந்த கண்ணியின் எழில்நுதற் காற்ருது
ஏங்கிநீ இளைந்து மிகவே
எட்டுதற் கெட்டாத விண்ணிடைக் கரந்துமே
எழிலது குறைந்து தேய
காரார்ந்த ஆகாயக் கங்கையைச் சடையிடை
கரந்துமே உலகுகாப் போன்
கனிவோடு உன்மீது இரக்கமுங் கொண்டுமே
கண்ணியார் முடியில் சேர்த்தான்
நீரார்ந்த நதியோடு நஞ்சுமிக வேயுடைய
நாகமும் அருகிருக்க
நண்ணும் நடுக்கம்நின் உடலிடைக் கண்டுமே
நங்கை நாரதர் மலையம்மை

ஆரார்ந்த ஆயத்து விளையாட அழைத்தனள்
அம்புலி ஆட வாவே
அங்கண் விசும்பிடை அலைந்து திரிந்திடும
அம்புலி ஆட வாவே.

5 நிலவார்ந்த சிறுமியர் நிலாச்சோறுக்கியே
நினைவேண்டுவர் நற்கணவர்
நீயுனது வெண்கலை நிறைந்துமே யொழுகியும்
நில்லாமல் எம் அர்ச்சையினை
உலவாத எழிலுடை ஒண்முகத் தொளியையும
உலந்துமே கவர்ந்து சென்றாய்
உயர்ந்தவள் எனக்கொண்டு சடையேற்ற
ஒவ்வாதாள் ஆகுகிருந்தாய் [கங்கையாம்
நிலவாத நின்நிறம அறிந்துமே எம்அம்மை
நின்செயல் மறந்தழைத்தாள்
நினைந்திடில் இவள்கருணை வானிலும்
நிலவைநீ அறியாததா? [பெரிதம்மா
அலர்சேருங் கண்ணான் அகிலமும் பூத்தவள்
அம்புலி ஆட வாவே.
அணைந்தாரின் வாழ்க்கையே அணையாமற்
அம்புலி ஆட வாவே. [காத்தவள்

6 விண்ணரில் பறந்துமே வேண்டிய வித்தைகள்
விளைத்துமே விண்மீன்களின்
விழிஇமைப்பாலே நீ[illegible]ம் புரந்துமே
வியப்புறு செயல்புரிந்தும்

மண்ணில் சிறந்திட்ட கொடைவள்ளல் பாரியின்
மணநாறு நீர்ப்பொய்கையில்
மகிழ்வுறு நெகிழ்மலர்ப் போதாக மெனும்படி
மலர்ந்துமே நிலவுமிழ்ந்தும்
கண்ணில் கருமணிப் பாவையாம் எம்மன்னை
கடைக்கண்ணொளிபெற வேங்குவாய்
ககனத் துயர்ந்துமே திரிதரும் தேவரும்
கானத் திசைநாரதர் மலை
எண்ணியே வந்திடுவர் நீவரத் தயக்கமேன் ?
அம்புலி ஆடவாவே.
எளியோரின் துயர்துடைக்கும் எம்மன்னை
அம்புலி ஆடவாவே [அழைப்பேற்று

7 எல்லையில் அண்டத்து இயங்கிடும் நிலவேயவண்
என்னதான் கண்டுகந்தாய் ?
எழிலார்ந்த எம்மன்னை கருங்கூந்தற்
எண்டிசை மேகநிரை [கொப்போதான்
முலைக்குத் தேரினையும் மயிலுக்குப் போர்வையும்
முன்னீந்த மன்னருண்டோ ?
மலைமுழையின் நெல்லியை மறவா தவ்வைக்
மாமலையோன் அதிகனுண்டோ? [கீந்த
ஒல்லையில் செந்தீயின் பசிநீக்க சாக்கூடம
உவந்தமைத்த விசயனுண்டோ?
ஒய்யாரமாகயின் ஏனிங்கு திரிகின்றாய்
உனக்கேற்ற அமையிங்குண்டு.,
அல்லையே வென்றுணும் அமுதகலசம் நிகர்
அம்புலி ஆடவாவே
அருள்மேவும் அடியவர் துயர்நீக்கும்
அம்புலி ஆடவாவே [அம்மையுடன்

8 விண்ணிலே உன்றனுக் கொளியேது விளங்கிடும்
வேகமா ஏழுடனே
விரைந்தோடும் ஒற்றைத் திகிரியுடை
ஊர்ந்திடும் பகலோனின்றி, [மாத்தேரை
கண்ணிலே மையுண்டு காதளவு ஓடியே
கனத்தநற் குழைபொருந்திட
கண்டுமே ஓலையாய் ஞாயிறு அவன்றனே
காத்துமே அவண்கிடந்தான்,
நண்ணுவார் தங்கட்கு ஞானமே நல்கிடும்
நங்கையின் திறனென்சொல்வேன்
நயந்துமே நீயும் இவளுற்று உய்ந்திடில்
நாளும்நல் லொளி பெறுகுவாய்,
பண்ணிலே இசையாகிப் பயனல்கும்
பால்நிலா ஆடவாவே [அம்மையுடன்
பாரோர் தொழுதிடும் பைங்கிளி அம்மையுடன்
பால்நிலா ஆடவாவே.

9 பாலுண்டு தேனுண்டு பயனுள்ள கனிகள்பல
பாரிலே நாளுமுண்டு
பார்த்தோர்க்குப் பசிதீரும் பால்நிலா
பாவையாம் எம்மனைக்கு. [முகமுண்டு
காலுண்டு நெகிழ்த்தேகுங் காருண்டு கனைசுடர்க்
காவலன் ஞாயிறுண்டு
ககனத்தே விரைந்தேகத் தடையுண்டோ
களைத்துமே தேய்ந்திடுவாய், [எனவோடிக்
ஆலுண்டு கண்டங் கருத்திட்ட அழற்கடவுள்
அளிதந்து நின்னையேற்றான்
அவன்றனே எம்மன்னை மெல்லடி வருடவே
ஆவலுடன் காத்துநின்றான்.

வேலுண்ட உண்கண் விளைதேறல்
விரும்பிநீ ஆடவாவே [மொழியாளொடு
விண்ணைப் பொருதுநனி மண்ணைப்
வெண்ணிலா ஆடவாவே [புரந்தவள்

10 செந்தாமரைப்போதும் வெண்டாமரைப்
சேர்ந்துமே இனிதிருக்க [போதும்
திருவோடு கலைமகள் இணைந்த நற்காட்சியை
தொண்டைமான் கண்டுவக்க
கொந்தார் மலர்ச்சூடும் கோமள வல்லியெங்
குலக்கொடி மாரியம்மை
கொடுத்திட்ட நற்பேறு உன்னியே
கூடிநின் றருள்பெறுவரே [அடியவர்கள்
நந்தாது நாளுமே வளர்ந்திட எண்ணிடில்
நாடுவாய் எம்மலையை
நண்ணார் புரஞ்செற்ற நான்மறை
நயந்திவண் வரங்கிடந்தான் [புகழ்மேலோன்
அந்தாதி இல்லாத அம்மையொடு விண்மேவும்
அம்புலி ஆட வாவே
அரும்புமென் மலர்ச்சூடும் அண்டம்
அம்புலி ஆட வாவே. [படைத்தாளொடு

8. அம்மானைப் பருவம்

1 வண்ண மலர்க்கை மெல்லியலார்
வரிசை பிறழா மரபிலிருந்து
வண்டாம் கருவிழி கைபுதைக்கும்
வாமக் கூந்தல் நெகிழ்ந்திடுமே

விண்ணை நிகர்க்கும் அக்கூந்தல்
மேக நிரையின் உட்புகுந்து
விரைந்து செல்லும் தண்மதியை
விளங்கித் தோன்றும் ஒண்முகமே
எண்ணச் சிதறல் எனும்படிக்கே
எழுந்து உயர்ந்து கீழிறங்கும்
எல்லையில்லா அம்மனைக்காய்
என்றும் நீங்காக் கரமுடையாய்
ஒண்ணு உவமை எழிலுடையாய்
உவந்தே அம்மனை ஆடுகவே
உயர்ந்தோர் உள்ளம் நிறைந்தவளே
உவந்தே அம்மனை ஆடுகவே.

2 ஆயம் நின்னைப் புடைசூழ
அணையா ஆசைப் பெருக்கால்நீ
அடியார் உள்ளம் நின்னருளாம்
ஆடிப் பெருக்கால் நிறைந்திடவே
தூய மாதர் எழுவருடன்
தோலா வென்றி தனைப்பெறவே
துள்ளும் கழற்காய் கைநிறைய
சுற்றிச் சுழன்று மேலெழும்பி
மாய வேலை பலகாட்டி
மயக்குந் திறனில் நினக்குநிகர்
மயிலே அவர்தாம் ஒப்பாரோ
மானே அம்மனைக்காய் கொண்டு
நாயேன் அதனைக் காணற்கு
நயந்து ஆடுக அம்மானை
நளின மலர்ந்தாள் அம்பிகையே
நயந்து ஆடுக அம்மானை.

3 ஆழிப் புனலில் ஆழ்த்தாமல்
அளிக்குந் தோணியப்பர்வளர்
அன்புப் புனலில் ஆழ்ந்திடுநல்
அறிவாற் சிறந்த தகையோர் வாழ்
காழி ஞான சம்பந்தன்
கனிந்தே ஞானப் பசிக்கழவே
கதருங் கன்றின் ஒலிகேட்டுக்
கனிந்தே யோடும் தாய்ப்பசுபோல்
ஊழித் தாக்கா உலகினையே
உவந்து காக்கும் எம்மன்னை
உலகு உய்ய ஞானப்பால
ஊட்டிக் காத்தாய், தமிழ்வளர்த்தாய்!
தாழிப் பொழுதே யாங்காண
நயந்து ஆடுக அம்மானை,
நலிவார் தங்கள் துயர்துடைக்க
நயந்து ஆடுக அம்மானை.

4 ஒன்றை இரண்டு மூன்றாக்கி
உயர்ந்து செல்லுங் கழற்சிக்காய்
ஒருநொடிப் போதில் கையடக்கி
ஒன்பது ஏழு எனப்பெருக்கி
கொன்றை மலர்த்தார் அணிமார்பன்
கொஞ்சுங் கிளியே, கோமளமே!
கொத்தாய் அவைதாம் நீயள்ளி
குலுக்கி அங்கை புறங்கையால்
மன்றந் தன்னில் நீயமர்ந்து
மலர்ந்த முகத்தின் கருவிழிகள்
மயக்கிப் பின்னை அவைதொடர
மயக்கி ஆடுவை அம்மானை

குன்றந் தனிலே வளர்கொடியே!
குலுக்கி ஆடுக அம்மானை,
குவலயம் காக்க வந்தவளே
குலுக்கி ஆடுக அம்மானை.

5 பிறைநுதலம்மையை இடப்பாகஞ்சுமந்து
பிறையைத் தலைக்கணியும்
பெம்மான் திருமணக் கோலத்தெடுத்தெறியும்
பெருமமுது வெண்டிரளின்
நுறையிலே படிந்துவீழ் அறுகால் வண்டரென
நொடியில் வான்வழி யேகியே
தோதக்க செய்துமே மதியிடை நுழைதரும்
நுண்கலை மானினமென
தரையிலே கிடந்துமே கையிலே படிந்துநனி
தாவியே மேலேழுந்து
தணியாத ஆசையால் அம்மையின் கருவிழிகள்
தாவியே உடனேகிட
விரையாரு மலர்மார்பு விளங்கிடும் அம்மையே
விரும்பி ஆடுக அம்மானை
வேதங்கள் சூழ்ந்துமே விளையாடும் அம்மையே
விரும்பி ஆடுக அம்மானை.

6 மழுவாருங் கையுடன் திரிசூலந் தாங்கியே
மங்கையுமை அருகிருக்க
மழகளிறு உரிவையுடன் வெம்புலியின் தோலு
மகிழ்ந்துமே அரைக்கசத்து [மிக
கழுகாரும் நன்காட்டில் சாம்பலைப் பூசியே
கணங்கள் சூழ்ந்திட ஆடியும்
ககனமொடு ஈரேழு உலகமுங் காத்திடும்
கனிவுடை நமச்சிவாயன்

எழுவேக மிகுத்திட எறிகின்ற கழற்சிக்காய்
ஏங்கிநின் கரம்மீண்டிடும்
எழிலினைக் கண்டுமே இனிதவ னிருந்தனன்
எல்லா மறந்துபின்னர் :
கெழுதகு அன்பெலாம் உயிரிடைக் காட்டுவாய்
அம்மானை ஆடியருளே
கெட்டார்க்குச் சார்வாய் கேட்டதை நல்குவாய்
அம்மானை ஆடியருளே.

7 பச்சை மரகதமும் முழுநீல மொடுதூய
பல்லொளி முத்தும்சேர்த்து
பரிமளங் கமழ்கையால் கடிதோச்சி அம்மனை நீ
பாங்குடன் ஆடுந்திறன்
இச்சைக் கடந்துமே அயனமாலுங் கெட்டாத
எழில்முடி அடிமறந்தோன்
இந்துவின் முறிசூடும எழில்முகங் கண்டுமே
ஏற்றதன் பிரிவுகைக்க
பச்சைக் கிளியோடு பூங்குயிலும் அன்னமும்
பரிவுடன் தூது செல்லும்
பண்பாய் அமைந்தது பணிசேரும் தண்மலர்
பாதம் நிகர்க்கும் அமையே
அச்சம தென்மனம் அகன்றிட அன்போடு
அம்மானை ஆடியருளே
அறவோர்கள் பலர்வாழும் நாரதர் மலைவாழ்
அம்மானை ஆடியருளே. [வோய்

8 வணங்குதற் கென அமை தெய்வங்கள் பலவுமே
வாழ்ந்திடும் நின்மலையில்
வானினும் நனிமயில் தேவர்கள் பலருமே
வந்தவண் கண்டேகுவார்

கணங்கள் சூழ்ந்திட நின்று கயிலையில் கொடு
களிப்புடன் ஆடும் இறைவன் [கொட்டி
கலைத்துமே அதைவிட்டுக் கனிவுடன் உன்மலை
காணுதற் கோடிவந்தான்
துணங்கை கூத்தினை நீ ஆடியே காட்டுவாய்
துயர்போக்க மலர்க்கையால் நீ
தூக்கியே விதிர்த்துமே அம்மனைக் காய்களை
தூங்கிடச் செய்வாய் வானில்
அணங்குவாய் நுணுகாரை அம்மெனும்
அம்மானை ஆடியருளே [மலர்க்கையால
அடியவர் துயர்போக்க அம்மெனும் மலர்க்கை
அம்மானை ஆடியருளே. [யால்

9 தில்லைவாழ் அந்தணர்கள் நாளும் மறையோதியே
தென்றிசைக் காவிரியின்
தெண்ணீர்க் கொணர்ந்துமே விரையாரும் பன்
தெங்கிள நீரும் பாலும் [னீரும்
ஒல்லையில கங்கைசேர் முடிபூற்றி ஒண்போது
ஒழியாது பலவுஞ் சாத்தி
ஒளியாரும் வெண்ணீறு உயர்மாமதச் சாந்துமே
ஒருவாது விரைந்து பூசி
வல்லியாய் உயர்புகழ் பாடிப் பரவியும்
வாய்த்தவை விரும்பாமல் நீ
வண்டமிழ்க் கொடிவாழும் நாரதர் மலைசார்ந்து
வாய்த்தலைக் காத்து நிற்பாய்.
அல்லையே வென்றவன் அறவாணன் கண்டிட
அம்மானை ஆடியருளே
அறவோர்கள் பலரோடும் நாரதர் மலைவாழ்
அம்மானை ஆடியருளே. [வோய்

10 தேடிக்கிடந்தே நின்றிரு வடிக்கே தொண்டு
செய்திட நாளும் எண்ணி
செம்பண் புது வெள்ள நீர்க்குமிழி யாமிந்த
செறிமுடை நாற்றவாழ்வை
ஊடிக் கிடந்தேன் ஒண்போதம் நின்னடிகள்
உள்ளத்தே ஒன்றித்தங்க
ஒல்லும் வகையான் அகப்புறந் தூய்தாக்கி
ஒளிமண விருக்கைக்கண்டேன்,
வாடிக் கிடக்கும் பயிர்போலும் எம்வாழ்வு
வளமாக வான்மழையாய்
வந்தெம் மனக்கோயில் குடிகொண்டு அடியே
வன்மங்களெலாம் போக்குவாய் [னின்
ஆடிக் கிடந்தே அறம்வளர் அம்மையே
அம்மானை ஆடியருளே
அன்பர் உளக்கோயில் வளர்கின்ற அம்மையே
அம்மானை ஆடியருளே.

9. திருநாடந் தருவர்

1 வள்ளிக் கணவன் வடிவேலன்
வணங்குமடியார் துயர்போக்கும்
வள்ளல் ஞானக் குருபரன்வாழ்
விராலி மலையும் அதன்பாங்கர்
வெள்ளிக் குன்றமெனத் திகழ
விரும்பி அவனை சென்றுதங்கும்
விளங்கு மலையாம் குமரமலை
விழைவார் வேண்டும் வரமிகவே

அள்ளிக் கொடுக்கும் குடுமிமலை
அனைத்து மலையின் நதிப்பெருக்கும்
அடித்துச் சுருட்டிக் கொண்டுவரும்
அழியா மணத்தின் நறுமபொருளும்
உள்ளி அவற்றின் வெள்ளமதில்
உவந்தே அமைநீராடுகவே
ஓயாப் புதுநீர் வெள்ளாற்றில்
உவந்தே அமைநீராடுகவே.

2 வானங் கருத்து முகில்மறைந்து
வயங்குமுச்சி தலைக்காறு
வண்ண மிகவே மின்னொளியாய்
வந்து தோன்றிப் பின்மறைந்து
கானங் கவிழ்ந்து சூல்கொண்டு
கண்ணார் சோலை தனிமறைப்ப
காற்று மழையாய்க் கடுத்தோடிக்
கால்கள் சிறக்க மிகப்பெய்யும
ஏனஞ் சூழ்ந்து அக்காட்டில்
இணைந்து வருந்த பெருவெள்ளம்
எங்கு மோடிப் பெரிதார்த்து
இறங்கு மோதை பேரச்சம்
தானஞ் சிறந்த நின்மலையில்
தாமே வருநீ ராடுகவே
தண்ணார் சோலை அம்மலையில்
தண்ணீர்ச் சுனைநீராடுகவே.

3 குன்ற மதிலே நெடிதோடிக்
குலைந்து தன்களைப் பாறுதற்கு
குனித்த வில்லை மேல்சாத்தி
கொஞ்சம் அழகைக் காணுதற்கு

நின்ற நிலையே மென்காற்று
நேரே முகிலைத் தழுவிடவே
நெஞ்சங் களிப்பைத் தான்மறந்து
நிறைந்த அருளாம் மழைசுரப்பான்
அன்றப் பொழுதே தண்சுனையில்
ஆம்பல் அல்லி தனையுயர்த்தி
அளிதா முன்னை நறவோடு
அலைத்து நிரம்பும் தண்ணீராம்
என்றன் துயர்தாங் களைந்தவளே!
இனிதாம் பன்னீராடுகவே;
எளியோர் தமக்கு இன்றுணையே!
இனிய சுனைநீராடுகவே.

4 பச்சை மரகத நின்னிறத்தால்
பவளந் தனது நிறமாறி
பனிசேர் முத்து வடங்களெலாம்
பச்சைக் கல்லாய்த் தோன்றிடுமே
இச்சைக் குகந்த அனப்பறவை
எழிலாஞ் சாயல் மயிலாக
எல்லாப் பொருளும் நீயாகி
இருந்தாய் எனவே மறைகூறும்
உச்சிப் பொருளாய் நிறைந்ததனை
உணர்த்தும் உன்றன் அணிநிறமே;
உயர்ந்த மலைவாய் தண்சுனையே
ஒழியா நீராய் ஊற்றெடுக்கும்
கச்சை அரைக்கு அசைத்தவளே!
கனிவாய்ச் சுனைநீராடுகவே;
காண்போர்க் கமுத மானவளே!
கனிவாய்ச் சுனைநீராடுகவே.

5 எழிலாருங் குழற்கூந்தல் நின் ஆயம் குங்குமம்
எங்கணுஞ் சிவிறிவீச
எல்லொளி ஆகாயமெனும் வடிவலை நனைத்து
எண்டிசை ஆடைதன்னை [மே
விழியாரும் நுதலுடையான் செவ்வான மேனியை
விழைந்துநீர் மஞ்சளாட்ட
விரையாரும் மலையருவி நீர்த்தேக்க மதனிடை
வெம்பாம்பு யானைசுற்ற
அழியாத அமுதுண நினைந்தவவ் வானவர்
அமுதுகடைப் பரவைமானும்
அல்லியும் ஆம்பலும் அலர்ந்துமே கள்நாறும்
அமரார்சூழ் தேஞ்சுனைநீர்
வழியாமே நின்றுதான் வானகங் காட்டுமே
வண்ணநீர் ஆடியருளே!
வருகின்ற அடியவர் துயர்போக்கும் அம்மையே
வண்ணநீர் ஆடியருளே.

6 கடன்மடை திறந்தென்ன ஓடிக் குதித்துமே
கழனி யெலாம் பாய்ந்துமே
கல்லெண ஆர்த்துமே காவெலாஞ் சூழ்ந்துநற்
கழைகளை முறிந்து வீழ்த்தி
அடன்மிகு விலங்கினம் ஆர்த்து நடுங்கிட
அணிவரை ஒலியெழுப்ப
அஞ்சியே அனப்பெடை அணிகிளர் முளரிவாய்
ஆழ்ந்துமே தனைமறைப்ப
விடன்மிகு கண்டனின் வேணியிடைமறை
விண்ணூர்ந்த கங்கையெனவே
வெள்ள மிகவேயெழும் வெள்ளாற்றின் தண்
விரும்பியே வருவர்வானோர் [ணீரை

நடமபயில அண்ணலும் நயந்துநீ ராடுவர்
நங்கை நீ ராடியருளே.
நான்மறைப் பொருள்யாவும் நயந்துமே நினைப்
நங்கைநீ ராடியருளே. [பாடும்

7 வண்ணமலர்ப் போதும் வைநீலத் தண்போதும்
விரிகமலத் துளவமுல்லை
விண்ணூர்ந்த கோங்கமும் வேங்கையும் கொன்
விரிகடம்பின் தண்பூ [றையும்
வெண்ணிலா போதுகள் எங்கணும் பரந்திட
எழில்முகில இடித்துமின்னி
இணையிலா நின்னருள் சுரந்து பரந்ததென
எல்லையில் மாரிபெய்து
கண்ணிலா ஊமனின் கலங்கவிழ் வேளையிற்
கருணை பொழிந்து காப்போய்
கடிதுநதி யோடிச் சுனைகளை நிரப்பிடும்
கடிமணங் கமழுந் தண்ணீர்
வெண்ணிலவின்பால் பரந்த வெள்ளாற்று நீர
விரும்பிநீ ராடியருளே; [தனை
விழைந்தார்க்கு விழைந்ததை விழைந்தவாற
விரும்பிநீ ராடியருளே. [ளிப்பவளே

8 தேனும் பிலிற்றிச் செழும்நீலத் தாதுதிர்த்துத்
தென்னவன் பொதிகையெனவே
செம்மாந்து பல்வளனும் தேக்கியே வருவாரின்
தீதெலாம் போக்கிநிற்கும
ஊனும் உருக்கி உள்ளமெனும் தறியதனில்
ஒன்றார் ஐம்புலனிறுக்கி
ஓயாமல் நின்நாமம் ஓதியே எனைமறந்து
உன்கழல் பற்றிநின்று

கானும் எழிற்சாரல் கலந்த நல் நாரதர்மலை
கண்டேன் யமைதோளணங்கே!
கங்கையென ஆகாயச் சுனை நிறை பன்னீரைக்
காவெலாம் பூமணக்கவே
மானும் மயிற்பூவை குயில்மகிழ்ந்து விளையாடு
மங்கை நீராடியருளே [வாய்
மயங்குவார் வாழ்வைமிகத் தெளிவிக்க வந்த
மங்கை நீராடியருளே. [வளே

9 முல்லை குறிஞ்சி முறையாற் றிரிந்துமே
முரண்மிகு பாலையின்வாய்
மொய்த்த மணற்பரப் பிலுடையுடை வெம்மையால்
முன்னெலாங் காய்ந்துதீயும்
எல்லை வரைப்பிற் கிடந்தநின் மலையென
எண்ணி எழிலார் மூவரும்
எய்தியே சரசுவதி யமுனை கங்கையென
இணைந்து ஏங்கியே நின்றார்,
வல்லைநீ மூவுலகுங் காத்து அளிப்பதில்
வாழும்நம் வாழ்வெனவே
வந்தவர் சுனையிலே காத்துக் கிடக்கின்றார்
வளர்செந் தமிழே நீசென்று
ஒல்லையில் அவர்காண உயர்தமி ழுலகுய்ய
ஒண்சுனை நீ ராடியருளே;
ஒன்றார் பகைதடிந்து உயர்ந்துநின் றவளே
ஒண்சுனை நீ ராடியருளே.

10 புறந்தூய்மை நீரா னமைத்துப் புகுந்தேன்
பொய்யான வாழ்வுழலும்
புறத்தேநான வாழ்ந்து அகத்தைத் தூய்தாக்க
புண்ணியம் பலபுரிந்தேன்

மறந்தான் கழந்தேன் மதியைநின் மலரடி
மாட்டுச் சேர்த்திட்டேன்
மலரவன் நாரணன் மாமறை காணாதான்
மற்றுள தேவர்களும்
அறந்தான் பெரிதென்றே அமர்ந்தநின்
ஆணவஞ் செற்றுநின்றார் [மலையிடை
அம்மையே நின் கோலங் கண்டு களித்திட
ஆர்வமுற் றேகிடந்தேன்
நிறந்தானும் செய்யதே நீள்கிரிச் சுனையிடை
நெகிழ்ந்துநீ ராடியருளே
நெய்மணக்குமலை கொய்மலர் தவழ்சுனை
நெடிதுநீ ராடியருளே.

10. ஊசற் பருவம்

1 வெள்ளித் தட்டா மெனமிதக்கும்
விளங்கும் நிலவின் அமுதகலை
விளர்த்த தென்ன முத்தினொளி
வியக்க அவைதாம் நிறைத்துவரி
அள்ளிக் கொடுத்து உலகைநனி
அன்னை காக்கும் அவளின் நிறம்
அன்னப் பவழக் காலெடுத்து
அலர்ந்த பச்சைப் பாசடையாங்
கிள்ளி இட்ட பலகையெனக்
கிளர்ந்து ஓங்கும் பொன்னூசல
கிளிகள் கொஞ்சும் நின்கையால்
கீர்த்தி மேவ எம்வாழ்வில்

பள்ளி உலகங் கடந்தவனே
பாவாய் ஆடுக பொன்னூசல்,
பணிவார் தமக்கு உறுதுணையே
பாவாய் ஆடுக பொன்னூசல்.

2 அன்னஞ் சூழுந் தண்வயல்கள்
அமைந்த நற்கா விடையிடை நந்து
அமுதம் நிறைந்து கிடந்தன
அலைகள் தவழும் பொய்கைகளா
மின்னம்போது தனிலபடிந்து
மெல்ல நடந்த இளந்தென்றல்
மெய்வாய்ப்பட்டு மெலிவகற்றி
மயிலே உனையே எட்டி நிற்கும்
கன்னெஞ் சினையே மலராக்கி
காட்சி எளிதாய் நீதந்து
காணு எனையே கண்டுவக்க
கனியே உனையே என்முன் நீ
கன்னஞ் சிவக்க வாய்சிவக்க
கண்ணே! ஆடுக பொன்னூசல,
காண்பார் உள்ளம் களிப்பெய்த
கனியே! ஆடுக பொன்னூசல்.

3 விண்ணில் பிறந்த வண்ணவில்லும்
விரிந்த ஞாயிற் றின்கதிரும்
விளங்கும் நீல வானவெளி
வியக்கு மிசைவதாய் ஒன்றாக
எண்ணில் ஊசல் தொடுப்பலகை
இயைந்த நெடிய கயிறெனவே
இணைந்து திகழ நின்றனது
எதில் பொன்னூசற் கிணையாமோ?

கண்ணி சூடிச் சடைகரந்தான்
கண்ணுதலான் றன் கங்கையினைக்
கரந்தே உடைக்கு அஞ்சியவள்
கலங்கி ஊசல் ஆடுகிறாள்
மண்ணில் நீயே பராசக்தி
மங்கை ஆடுக பொன்னூசல்
மலர்ந்த உளத்தார் வாழ்வுற
மகிழ்ந்தே ஆடுக பொன்னூசல்.

4 கணபதி முதலா ஐம்புகேசர்
கடம்பவனேசர் சொக்கநாதர்
கண்ணி அகிலாண்டேசுவரி
கனிவுடை மங்கள நாயகியாம்
மணமுடை சோலைசூழ் கோட்டையிலே
மன்னர் முனீசுரர் ஜாமுறை
மருங்குடை இருங்குழல் நாயகியும்
மயக்குறு ஆகாய மங்கையொடு
கணங்களுஞ் சூழ்ந்து உன்மலையில்
காத்துக் கிடந்தவர் நின்றனது
கனக மணியுடை பொன்னூசல்
காட்சி நீதரும் போற்றிற்று
மணமநிறை நங்காய் மலர்க்கொம்பே!
மகிழ்ந்து ஆடுக பொன்னூசல்..
மலர்ந்த உளத்தார் வாழ்வுற
மகிழ்ந்தே ஆடுக பொன்னூசல்.

5 குன்றினருகே வேங்கையுடன்
குலவித் தழுவி மேலபடரும்
குறிஞ்சா வென்னும் கொடிதானே
குறித்த ஏணி வானுக்கு

அன்றி வேறோர் வழியில்லை
என்றே கானவர் அங்கிருப்பார்
அதனின் பெருமை அறிவாரோ?
அம்மையே! அணைமதோள் மெல்லியலாய்!
நன்றி நின்மலை பிறந்ததற்கே
நாளும் நினைக்கா காத்திருக்கும்
நளின மலர்த்தாள் நாயகியே!
நயந்து பொன்கொடி மேலிருந்து,
வென்றி கொள்ளும் விடைக்கொடியே!
விரும்பி ஆடுக பொன்னூசல்,
விழைந்தார் தம்மை வாழ்விப்போய்!
விரும்பி ஆடுக பொன்னூசல்.

6 இறைவனுன் ஊசல் காணுதற்கு
ஏற்றதன் ஆட்டத்தைத் தில்லைவிட்டே
எல்லையில் நின்மலை நாடிவந்தான்
எழிலாம் நின் ஊசலின் ஆட்டந்தன்னை
மறையவன் கண்டுமே தலையசைக்க
மற்றவன் உடனிறந்திடும் ஆதிசேடன்
மறவாமல் தன்னிலை மறந்துதானே
மதவுரியானைசைவோடு மயங்கி ஆட
குறையாரும் இவ்வுலகு குழைந்து ஆட
கோடானுகோடி அண்டம குலைநடுங்க
குன்றமதாம் நாரதர்மலை நின்றவளே
கோமேதகமே வந்து வாழ்வளிப்பாய்
நிறையாரும் மலைமேவும் அம்மை நீ
நினைந்துமே பொன்னூசல் ஆடியருளே
நினைவார் தம் பவநோயை நீக்குவாயே
நினைந்துமே பொன்னூசல் ஆடியருளே.

7 செழுமணித் திருவூசல் அரமகளிர் கொண்டாட
செயிர்த்துநீ ஆடுந்தொறும்
சிந்தும்நின் புன்முறுவல் நிலவொளிக்
செய்யதாள் சகோரமெனவும் [கேங்கிடும்
கொழுநிறக் கருமையால் கூந்தலின் மணநோக்கி
குலவிடுஞ் சுரும்பரெனவும்
கொஞ்சும் மலர்க்கைவளர் பசுங்கிள்ளை
குவலயம் படைத்துகந்தோன் [என்றிடவும்
கெழுதகு உருவங்கள் நினைத்தவை பெற்றனன்
கிளத்தமறை மெய்கள் தாமே
கின்னரர் கிம்புருடர் முப்பத்து முக்கோடி
கேளிருஞ் சூழ்ந்து நிற்க
பழுதிலா நின்மலையில் பைங்கொடி விரும்பிநீ
பொன்னூசல் ஆடியருளே
பைந்துணர் மலர்மாலை சூட்டிய பைங்கொடி
பொன்னூசல் ஆடியருளே.

8 பாழுந் தனிப்பிறவி பாரில் யான்பெற்றே
படுந்துன்பம் யறிந்திலையோ!
பரமனின் புகழ்பாடும் பல்லோரும் அவனோடு
பக்கலில் வந்துநின்றார்
தாழும் நிலையிங்கு எம்வாழ்வில் இனிஇல்லை
தாயே நின் பாலுற்றதால்
தமிழே! தமிழிலுறுஞ் சுவையே! சுவைநடுவே
சார்ந்திடும் புலமைநலமே!
ஆழுந்துயர் நீக்கி அன்பனைப் புலவனாய்
ஆக்கிய ஆரணங்கே!
அன்னையின் திறங்காண அடியரோ
அன்புக்கு எல்லையுண்டோ? [டிங்குற்றேன்

பாழுந் துயர்ப்பிறவி நீங்கிடப் பைந்தொடி
பொன்னூசல் ஆடியருளே
பைந்துணர் மலர்மாலை சூட்டிய பைங்கொடி
பொன்னூசல் ஆடியருளே.

9 விரையாரும் மலர்க்கொம்பே! விண்ணே! மதியே!
விண்ணிலுறு கருமுகிலே!
விண்ணவர் விழைந்திடும் வீடிலா அமுதே!
விழைவார்க்கு வீடளிக்கும்
நரையாருந் துணரே! நமனகாயுஞ் சக்தியே!
நண்ணுரை நண்ணுவிக்கும்
நவிலருட் கடலே! நலஞ்செயும் பிணையே!
நம்பிரான் எழிற்றுணையே!
கரையிலா அன்பே! அன்பர்தம் உளக்கோயில்
காட்சிக்கு இனிய விளக்கே!
கண்ணிலா ஊமன்என் வாழ்வினில் ஒளியாகி
கருணைமழை பொழிநிலவே!
பொறைமிகு செல்வியே! பொன்னே! மணியேநீ
பொன்னூசல் ஆடியருளே!
போகமே! மெய்ஞ்ஞானம் வழங்கிட வந்தவளே!
பொன்னூசல் ஆடியருளே.

10 வாழ்வின் அடித்தலங் கிடந்துழல் வேனை நின்
வண்ணமலர்க் கைகொடுத்து
வகையாருங் கல்வியுஞ் செல்வமும் ஈந்துமே
வாழ்விக்க வந்தமுதலே!

தாழ்விலும் வாழ்விலும் தணியாத ஆசையால்
தாயேயான் நினைமறவேன்.,
தக்கோர்கள் அவைமுன்னே மிக்கோனாய்
தண்ணளிப் பெருங்கடலே! [எனையீன்ற
ஆழ்துயர் நீங்கியே யான்பாடும் புன்மொழியை
அமுதமென ஏற்றருள்வாய்!
அம்மேயான் என்வாழ்வில் இதனினும் பெரும்
அடையவே றென்ன சொல்வாய்., [பேறு
பாழ்பிறவி கடிந்தருளும் பைம்பொன்னே!
பொன்னூசல் ஆடியருளே! [மணியேநீ
போகமே மெய்ஞானம் வழங்கிட வந்தவளே
பொன்னூசல் ஆடியருளே.

நலம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
13	3	இடத்தவன்	இடத்தவள்
13	8	பூரிப்பாய்	பூரிப்பாள்
14	11	உன்ளை	உன்னை
15	5	மலாரம்	மலராம்



செந்தமிழ்ப் பதிப்பகம், புதுக்கோட்டை.

பழநி அந்தாதி: காசு : **75**

அழகும் அன்பும் அருளும் நிறைந்த முருகனைப் பற்றிப் புலவர். **கு. மு. சுந்தரகணேசன்** மனம் உருகிப் பாடியுள்ள **100** பாடல்கள் இந்நூலில் உள்ளன.

அந்தாதியின் இலக்கணப்படி, ஒவ்வொரு பாடலில் முடிவும் அடுத்த பாடலில் முதலாக அமைந்துள்ளது.

இறையருளைப் பெற விரும்புவோர் எல்லோரும் இந்த அந்தாதியைப் படித்து, பாடல்களை மனனம் செய்து வீடுபேற்றை அடைய வழி வகுத்துக் கொள்ளலாம்.

திருமுருக கிருபானந்த வாரியார் இந்நூலுக்கு அணிந்துரை அளித்திருப்பதே இதன் பெருமையை உணர்த்துகிறது.

— தமிழ்நாடு (27—2—68)

Dr K. ARUMUGHAN M A., M.Litt., Ph. D.,
Reader in Tamil
UNIVERSITY OF DELHI, DELHI-7

'பழநி அந்தாதி' படித்துவருகிறேன்; முழுவதும் படித்து முடித்த பின் கடிதம் எழுத எண்ணினேன்; ஒருவாறு படித்தேன்;

"காணுதற்கு என்றனுக்குக் கண் வேண்டும்"
என்ற பாடலும்,

"படியில் விடியும் வரையில் வரங்கிடந்தும் வாழ்வேன்" என்னும் பகுதியும், பக்திச் சுவை நனி சொட்டுகின்ற திறம் உணர்ந்து மகிழ்வேன்.

"முன்னம் மணமுடித்த மொய்குழல் தெய்வானை" என்னும் திருப்பாட்டு காதற் சுவை ததும்புகிறது. "கண்டேனே நின்னுடைய கைவண்ணம்," "போகமதை விரும்பிப்போனாயோ" என்னும் பாடல்களில் வஞ்சப்புகழ்ச்சி அணி அமைந்து உள்ளத்திற்கு உவகை தரும். "எவ்வுயிர்க்கும் ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப வாழ்வு தரும் செய்ய மலர்முகமும்," என்னும் குமரகுருபர அடிகளின் தெய்வத் திருப்பாட்டை நினைவூட்டு கிறது, "நீ நினைத்தால் வெல்லுமே அவ்விதிவ்ய வேல்" என்னும் பழநி அந்தாதிப்பாடல். "கண்போன பின்னர் கதிரோனைக் காணவல்லீர் பண்பாளா அன்னவரைப்பார்" என்னும் அடிகள் செவ்வேளின் திருவருட் பெருக்கினைப் புலப் படுத்தா நிற்கும். இங்ஙனம் எத்தனை எத்தனை அழகுகள்! முருகன் பெருமை இச்சிறு கடிதத்தில் எழுதி வெளியிட இயலாது. முருகப்பெருமான் மீது தாங்கள் கொண்ட பக்தி மேம்பாட்டைப் புலப்படுத்திப் படிப்போர் உள்ளத்தை உருகச் செய்கின்றது பழநி அந்தாதி. முருகன் பெருமையை உருகிப் பாடிய உள்ளத்தைப் போற்றி வழிபடுகின்றேன், அவ்வுள்ளம் முருகன் உறையும் திருக்கோயிலாதலின்.
